# ரமணோதயம்

ஜனவரி 2013
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20



# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பதினோறு ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதினோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ “Ramanodhayam” என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்

உதயம் 12 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்

ஜனவரி 2013

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

இணை ஆசிரியர்: தியாகராஜன்

ஆலோசகர்கள்:

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டுச் சந்தா: ரூ. 75 தனி பிரதி: ரூ. 20

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர் சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:

குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2013


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | ஸ்ரீ ரமண மஹாவாக்யம் — பிர. கிரிதர ஜெததீஷ் | 18 |
| 3 | மோன சன்னதியின் மகிமை — வி. நிரஞ்சன் | 25 |
| 4 | திருரமணக் குறள் — தாயுமானவன் | 35 |
| 5 | ரிபுகீதை — தியாகராஜன் | 38 |
| 6 | இனிவரும் திருநாட்கள் | 43 |
| 7 | பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி கூறும் தியானம் | 44 |
| 8 | பஜ கோவிந்தம் — டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த் | 49 |
| 9 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை — Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 55 |
| 10 | நீல வானில் இரு வெண்முகில்கள் — சு. பரமேஸ்வரன் | 65 |
| 11 | அருணாசல பக்த பகவத் — ஆகுரா | 70 |
| 12 | செய்திகள் | 74 |
| 12 | ரமணோதயம் காப்பு நிதி தொடரும் நன்கொடையாளர்கள் | 79 |

# ஆசிரியர் உரை

## வாயில் ஒட்டாத வெண்ணெய்!

நம் அனைவருக்கும் இருக்கும் ஒரே நோக்கம் அமரநிலை எய்துவதே. இதை எப்படி எய்துவது?

> **வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும்.**

இந்த உலகில் வாழ்க்கை நடத்தும்போது, எப்படி ஆன்மீகம் சார்ந்த வாழ்கை நடத்த வேண்டுமோ அப்படி வாழ்ந்தால், அமர நிலையை அடையலாம் என்கிறார் வள்ளுவர். இந்த உலக வாழ்க்கையோ பற்றுகளால் உண்டானது; நம்மை ஆசைகள் என்னும் கயிற்றால் கட்டி வைப்பது. ஆன்மீக வாழ்கையோ பற்று நீத்த வாழ்க்கை; ஆசைகள் ஒடுங்கிய வாழ்க்கை. இரண்டுமே ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டால் எப்படி உலக வாழ்க்கை நடத்தும் போதே ஆன்மீக நோக்கத்தையும் பின்பற்ற முடியும்? என்ற ஐயம் எழுவது இயற்கையே. இது மிகக் கடினம் என்று தோன்றுகிறதல்லவா? இல்லை என்கிறார் பகவான். இந்த உலக வாழ்வில் வாழும்போது அதோடு உன்னை ஒன்றுபடுத்திக் கொள்ளாதே. அதே சமயம் உலகையே நீத்து, யாருடனும் பேசாமலும், அன்பு காட்டாமலும் இருக்கவும் தேவையில்லை. இதயத்தின் ஆழத்தில் சதா பேரருளையே தியானித்துக் கொண்டு, சலனமற்ற உள்ளத்துடன், அதே சமயம் வெளி உலகத் தொடர்பு ஏற்படும்போது, மற்றவர்களுக்காக மன எழுச்சி காட்டி,

உணர்ச்சி கொந்தளிக்காவிடினும், தீவிர உணர்ச்சிகள் உனக்கு ஏற்படுவதுபோல நடித்துக் காட்டி, உலகில் சந்தோஷமாக விளையாடு! நீதான் வீரன்! என்று வழிகாட்டுகிறார் பகவான்.

*போலிமன வெழுச்சிமகிழ் வுற்றோ னாகிப்*
*போலிமனப் பதைப்புவெறுப் புற்றோ னாகிப்*
*போலிமுயல் வாந்தொடக்க முற்றோ னாகிப்*
*புரையிலனா யுலகில்விளை யாடு வீரா*
*மாலெனும்பல் கட்டுவிடு பட்டோ னாகி*
*மன்னுசம னாகியெல்லா நிலைமைக் கண்ணும்*
*வேலைகள்வே தடத்தியைவ வெளியிற் செய்து*
*வேண்டியவா றுலகில்விளை யாடு வீரா!*

*உள்ளது நாற்பது அனுபந்தம், 27*

பகவானின் இந்த உபதேசம் நமக்கு விசித்திரமாகப் படலாம். எப்படி உலக வாழ்வில் வாழ்ந்து கொண்டே அதே சமயம் ஞானியாகவும் பற்றற்ற வாழ்க்கை நடத்த முடியும்? இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்லவா? நாம் உலகச் செயலில் ஈடுபடும்போது, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதன் விளைவுகள் நம்மை பந்தப்படுத்துகிறதல்லாவா? நம்மை போல் உலகியல் செயலில் ஈடுபடும்போது ஒரு ஞானிக்கும் அதன் தொடர்பான பற்றுகள் ஏற்படாதா? என்று தோன்றலாம். பகவானின் வாழ்க்கையே இதற்கு விடையும் விளக்கமும் அளிக்கிறது. நாம் முன்பே முண்டக உபநிடத உதாரணத்தைக் கண்டிருக்கிறோம். ஒரே மரத்தின் கிளையில் இரு பறவைகள் அமர்ந்துள்ளன. இரண்டும் ஒன்று போன்றே இருந்தாலும், முதல் பறவை கசப்பும் இனிப்புமான பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கின்றது. இரண்டாவதான மேல் மட்டப் பறவையோ, அமைதியாக அமர்ந்து உள்ளது. உண்பதில் சலித்துப் போன பறவை, சாந்தமான பறவையைக் காண்கிறது. அடே! இதுவும் நம்மைப் போலவே

*இருக்கிறதே! என்று வியந்து அதை நோக்கிச் செல்கிறது. அதை நெருங்கியவுடன் தான், தான் அதனின்று வேறுபட்டதல்ல, தான் அந்த அமைதியான பறவையின் நிழல் தான் என்று உணர்ந்து கொள்கிறது. கீழ்ப் பறவைதான் சுக துக்கங்களால் பாதிக்கப்படும் ஜீவன், மேல் பறவைதான் ஆத்ம ஞானி. இரண்டும் ஒரே கிளையான ஒரே உலக வாழ்வில் அமர்ந்திருந்தாலும், ஞானப் பறவை சுக துக்கங்களால் பாதிக்கப்படுவதில்லை.*

*ஞானி உலக வாழ்வில் நம் போல வாழ்ந்தாலும் அவன் உலக சுக துக்கங்களால் பாதிக்கப்படுவதில்லை. அவனுக்கு அது ஒரு விளையாட்டே! என்று தனது குருகுலத்திலே வைணவ ஆசாரியனான பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவன் எழுந்திருந்து அதெப்படி ஒரே சூழ்நிலையில், ஒரே மாதிரி உலக வாழ்க்கை, இரு சாராரில் ஞானி மற்றும் அஞ்ஞானி, ஒருவரை மட்டும் உலகப் பற்று ஒட்டிக் கொள்ளாது மற்றொருவரிடம் மட்டும் சம்சார பந்தம் ஒட்டிக் கொள்ளும்? இது தர்க்கத்திற்குப் பொருத்தமானதாக இல்லையே? நீங்கள் அதனை உதாரண பூர்வமாக நிருபிக்க வேண்டும். இல்லையேல் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்! என்றான். ஆசாரியர் நான் உனக்கு அடுத்த மாதம் பதில் தருகிறேன் என்றார். மாணவனுக்கோ ஒரே ஆனந்தம். ஆசாரியர் பதில் கூற முடியாத கேள்வியை கேட்டுவிட்டோம் என்று இறுமாப்பு அடைந்தான்.*

*மார்கழி மாதம் திருப்பாவை இருப்பத்தேழாவது பாசுரம் நாள். என் போன்ற சாப்பாட்டு ராமர்கட்கு பிடித்தமான பாசுரம். பால் சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவார கூடி இருந்து குளிர்ந்து அநுபவிப்பதைக் கூறுவது. சர்க்கரைப் பொங்கலில் வழிய வழிய நெய் பெய்து அதைக் கையில் ஏந்தி அநுபவிப்பது. (அந்தக் கால மனிதர்கட்கு கொலஸ்ட்ரால் பிரச்சினை கிடையாது).*

*கேள்வி கேட்ட மாணவனை அழைத்த ஐயங்கார், அவன் கை நிறைய நெய் வழிய வழிய சர்க்கரைப் பொங்கலைக் கொடுத்தார். சீடன் சந்தோஷமாகச் சாப்பிட்டு முடித்தான். கை முழுக்க நெய். ஆசாரியர் அவனிடம் சீயக்காய்ப் பொடி கொடுத்து கையை அலம்பி வா என்றார். சீடன் நன்றாக கையை அலம்பிக் கொண்டு வந்தான். மீண்டும் ஆசாரியர் அவன் கையில் சீயக்காய் பொடி போடப் போனார். மாணவன் ஆசாரியரிடம் ஆசானே கையில் இப்போது ஒரு சிறிதும் நெய்ப் பிசுக்கு இல்லை. என்றான். நீ வாய் வழியேதான் சாப்பிட்டாய், கையில் ஒட்டிக் கொண்ட நெய் வாயில் ஒட்டிக் கொண்டிருக்காதோ? என்றார். மாணவன் வாயில் எப்படி ஒட்டும்; நெய் கையில் தானே ஒட்டும் என்று கேட்டான். இதுதான் உன் சந்தேகத்திற்கு உரிய விடை! ஒரே உடலில் இருந்தாலும் கையில் ஒட்டும் நெய் வாயில் ஒட்டுவதில்லை. அதே போன்று ஞானியரும், அஞ்ஞானியரும் ஒரே உலகில் வாழ்ந்தாலும், உலகம் ஞானியரைப் பற்றாது, தானாகவே விலகிச் சென்று விடும். அஞ்ஞானிக்கோ, அவனை அது விடாமல் பற்றித் தொடர்கிறது என விளக்கினார்.*

***த்ரயம்ப$^{3}$கம் யஜாமஹே***
***ஸுக$^{3}$ந்தி$^{4}$ம் புஷ்டி வர்த$^{4}$னம்***
***உர்வாருக மிவ ப$^{3}$ந்த$^{4}$னாத்***
***ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்***

*அடையும் போது, அவன் நமது மனதில் உள்ள தீய வாஸனைகளை நீக்கி, தன்னுடைய தியானமாகிய ஸுகந்தத்தால் நிரப்பி, ஆத்ம சாதனை தீவிரமாகச் செய்வதற்கான பலத்தை அளித்து, அந்தத் தீவிர சாதனை மூலம் வெள்ளரிப் பழம் கொடியிலிருந்து விடுபடுவது போல, நம்மை இறப்பைக் கடந்து ஆத்மசாட்சாத்காரம் அடையச் செய்கிறார் என்பது இந்த வேத மந்திரத்தின் பொருள்.*

*இந்த வெள்ளரிப் பழ உவமையின் தனிச் சிறப்பு யாதெனில் மற்ற பழங்கள் கனிந்த பின் அவைதான்*

மரத்தைவிட்டு நீங்கும் - மாம்பழம் போன்று. கொடியில் காய்க்கும் பழமாகிய வெள்ளரிப் பழம் கனிந்த பின், அது ஒரு முயற்சியும் செய்யாமல், கொடியே அதனை விடுத்து அகன்று சென்று விடுகிறது. அதேபோல் ஆத்ம சாட்சாத்காரம் பெற்ற ஞானியினைப் பொறுத்தவரை அவன் உலகை விட்டு நீங்க எந்த முயற்சியும் எடுப்பது இல்லை. ஆனால் உலகமே ஞானியை விட்டு தானே நீங்கிச் சென்று விடுகிறது. எந்தப் பற்றுமே அவனைப் பற்றுவதில்லை.

அது மட்டுமின்றி மற்ற பழங்கள் அதிகமாகக் கனிந்து விட்டால் அழுகிக் கெட்டு விடும். வெள்ளரிப் பழமோ, முற்றிலும் கனிந்து விட்டால் வெடித்து மண்ணில் கலந்து விடும். அது போன்றே முற்றிலும் கனிந்த ஆத்ம ஞானிக்கு மற்றவர்களைப் போல் அழிவு இல்லை. அவன் தேஹவியோகம் அடைந்த பின், அவன் சூட்சும தேஹம் உலகசக்திகளில் கலந்து ஒன்றுகிறது. அருணாசலத்தின் அன்பன் இங்ஙனம் கரைவதை பகவான்,

நைந்தழி கனியான் நலனிலை பதத்தில்
நாடி உட்கொள் நலம் அருணாசலா!
(அக்ஷரமணமாலை)

என்று பாடுகிறார்.

ஞானி உலக வாழ்வில் ஈடுபடுவது போல் தோன்றினாலும், உண்மையில் அது அவனது பாசாங்கு நடிப்பே. அவன் எப்போதும் ஆத்மாவிலேயே ரமித்திருத்திருக்கிறான் என்று சங்கரர் பஜகோவிந்தத்தில் கூறுகிறார் -

யோக ரதோவா போக ரதோவா
ஸங்க ரதோவா ஸங்க விஹீந:
யஸ்ய பரஹ்ணி ரமதே சித்தம்
நந்ததி நந்ததி நந்தத்யேவ!
(பஜ கோவிந்தம், 19)


*யோகத்தில் ஆழ்ந்திருந்தாலும் சரி, உலக அநுபவத்தில் ஈடுபட்டிருந்தாலும் சரி, தனது சித்தத்தை ப்ரம்மத்தில் இடையறாது வைத்திருப்பவன், நிச்சயமாக அந்த ப்ரம்ம நிலையையே அடைகிறார் என்கிறார் பகவத் பாதர். மற்றும் ரமதோ பால உன்மத்த வதேவ என்று அஞ்ஞானி பாலகனைப் போலும் உன்மத்த நிலையிலிருப்பவன் போலும் எப்போதும் மகிழ்ச்சியில் நிலைத்திருப்பான் என்கிறார்.*

*"குழந்தையும் ஞானியும் ஒரு விதத்தில் சமமானவர்கள், அவ்வக் காரியம் நடைபெறும்போது சிறுவர்கள் அதில் ஈடுபட்டு இருப்பார்கள்; அந்தக் காரியம் முடிந்தவுடன் அதனை உடனே மறந்து விடுவார்கள். அவர்கள் மனதில் அதனால் ஸம்ஸ்காரங்கள் ஏற்படுவதில்லை. அதனால் அவர்கள் பாதிக்கப்படுவதும் இல்லை. ஞானிகளும் அப்படியே" என்கிறார் பகவான் (பகவத் வசனாம்ருதம், 9). ஞானி ஏதேனும் ஒன்றை ஆர்வத்துடன் கவனித்தால், அது நம் போல் அந்தப் பொருளின் மீது உள்ள ஆசையினால் அல்ல. ஒரு குழந்தை தனது சூழ்நிலையில் உள்ள பொருட்களையும், நடக்கும் நிகழ்ச்சிகளையும் ஆர்வத்துடன் நோக்கும். அந்தக் குழந்தை அந்தச் சூழ்நிலையை விட்டு நீங்கியவுடன் அந்த விஷயமும் அதன் மனதை விட்டு நீங்கி விடுகிறது. அதே போன்று ஞானியும் ஏதேனும் ஒரு பொருளை நோக்கும்போது ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் நோக்குகிறானே அன்றி அதன் மீதுள்ள ஆசையினால் அல்ல. அவன் செயல்களும் அவ்வாறே அவை ஞானியின் மீது எந்த நிரந்தர விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை.*

*திரு பி.ஸி.தாஸ் என்ற அன்பருக்கு விளக்கும்போது பகவான் கூறுகிறார், ஜீவனது இயக்கம் அனைத்தும் இறை சக்தி ஒன்றாலேயே நிகழ்வது. ஆனால் அஞ்ஞானி தானே எல்லாவற்றையும் செய்வதாக அறியாமையால் நினைக்கின்றான். என்னை யாராவது எழுந்து நிற்க வைத்தால், எல்லாப் பகைவர்களையும் நான் ஒருவனே*

*விரட்டிவிடுவேன் என்று கூறிய முடவனைப் போலவே, தனக்கென இயல் செயல் ஏதும் அற்ற மனிதன், மதிமயக்கத்தால் அஹங்கரிக்கின்றான். அஞ்ஞானியின் செயல் அவன் விருப்பத்தால் நிகழ்வது, விருப்பம் அஹந்தை எழுச்சியைப் பற்றி நிகழ்வது. அஹந்தை தனக்கப்பாலுள்ள ஒரு சக்தியில் இருந்து அதிலேயே மறைவது. அதை விட்டு அஹந்தைக்கு இருப்பே இல்லை. உண்மை இவ்வாறு இருக்க நான் என்று அஹங்கரித்து எழுதல், எவ்வளவு முட்டாள்தனம் இவ்வுண்மையை உணர்ந்த ஞானி, தன்னிலையிலேயே இருந்துகொண்டு புறத்தில் எச்செயல்களைச் செய்யினும், செய்யாவிடினும் தனது இருப்பு ஒன்றாலேயே உலகனைத்துக்கும் சிறந்த முறையில் உதவுகின்றான் (திரு அருண் மொழி, 210).*

*அஞ்ஞானியின் செயல்பாடுகள் மனதில் ஸமஸ்காரம் எனப்படும். பதிவுகளை ஏற்படுத்தி, அவனை மீண்டும், மீண்டும் செயல் புரியத் தூண்டுகின்றன. ஒரு ஞானிக்கோ மனம் என்று ஒன்றுமில்லை. அவன் மனத்தைக் கடந்து சென்று விட்டான். ஞானியும் நம் போல் செயல்புரிவதால், நாமே நம் போல் ஞானிக்கும் மனம் இருப்பதாக எண்ணிக் கொள்கிறோம். ஆனால் அது வறுக்கப்பட்ட விதைக்கு ஒப்பானது, அங்கே வாசனைகள் முற்றும் நசிந்து விட்டன. ஞானியின் மனமே ப்ரம்ம ஸ்வரூபம். அவன் நம்மைப் போலவே உலகச் செயல்களில் ஈடுபட்டாலும் அவை அவனுக்கு ஒரு விளையாட்டே. அது அவனுக்கு எத்தகைய மனப்பதிவுகளையும் ஏற்பதில்லை. (அருண் மொழி, 383). கவிஞர் கோலரிட்ஜ் கூறும் அழகிய உதாரணப் படி, ஞானியின் செயல்கள் ஒரு கடலின் வண்ணச் சித்திரத்தில் தோன்றும் சித்திரக் கப்பல் போன்றவையே. கடலும் உள்ளது, கப்பலும் உள்ளது. அசைவுதான் இல்லை. ஞானிக்கு செயல்பாடு இருப்பினும், அதனால் மனப்பதிவு ஏதும் விளைவதில்லை, அது அவனுக்கு ஒரு விளையாட்டே.*



பகவான் கூறும் ஓர் அழகிய உதாரணம் இது. ஒரு ஞானி, வெளித் தோற்றத்தில் எந்தச் செயலும் புரியாத சோம்பேறி போல் அமர்ந்திருந்தாலும், உண்மையில் அவன் இடையறாது செயல் புரிகிறான். அவனது செயலற்றது போல் காணப்படும் நிலை, உண்மையில் மிக வேகமாகச் சுழலும் பம்பரத்தின் நிலை போன்றதாகும். பம்பரம் மிக வேகமாகச் சுற்றும் போது அது சுற்றுவதை நம் கண்ணால் காண முடிவதில்லை. எனவே செயலற்று தூங்குவது போல் காணப்படுகிறது ஞானியின் செயலும். (திரு அருண்மொழி, 599) . இந்த இடையறாச் செயலால் உலகம் முழுதும் பலன் அடைகிறது. இந்த இடையறாச் செயல்பாட்டுக்கான பெரும் சக்தி அவனது ஆத்மாவில் இருந்து வெளிவருகிறது. இதுவே ஞானியின் "Apparante activity, Real Abidance".

பகவானது யோகவாஸிட்டப் பாடல் மொழி பெயர்ப்பிலிருந்து தொடங்கினோம் அல்லவா? என்னிடம் அன்பர் ஒருவர் கேட்ட கேள்வி - பகவானும் இவ்வாறு போலி மன எழுச்சி உற்றோனாய் செயல் புரிந்து இருக்கிறாரா? பகவானின் வாழ்க்கை மணமாலையில்

*பல்வேறு சம்பவ ரத்தினங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. பகவானின் தாய் மஹாசமாதியான பின் நிகழ்ந்த நிகழ்ச்சி இது. இன்று நாம் கண்டு ஆனந்திக்கும் ரமணாஸ்ரம அமைப்பினை உருவாக்கிய சின்ன ஸ்வாமி — அவரது இயற்பெயர் நிரஞ்ஜனானந்த ஸ்வாமி — ஒரு முறை தன்னுடைய வெளிப்படை குணத்தின்படி, முரட்டுப் பிடிவாதமாகத் தான் சொன்ன ஏதோ ஒன்றினையே வற்புறுத்திக் கொண்டு இருந்தார். பகவானோ, நுண்மையே வடிவான தந்தச் சிற்பம். எதற்காக இந்த வாக்குவாதம் என்று எண்ணிய பகவான், ரொம்ப சரி, அப்போது நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கவா? என்று கூறினார்.*

*இதைத் தண்டபாணி ஸ்வாமி கேட்டுக் கொண்டு இருந்தார். வாட்டசாட்டமாக அதிரும் குரலும் கொண்டவர். என்ன இப்படி பகவானை, கூற வைத்துவிட்டாரே! இந்தச் சின்ன ஸ்வாமி, என்று அவருக்குக் கோபம் பொங்கி வந்தது. இன்னது செய்கிறோம் என்று அவருக்கே புரிந்ததோ இல்லையோ! சிறிய உருவமுடைய சின்ன ஸ்வாமியை குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு பாலி தீர்த்தத்தில் மூழ்கடிப்பது போல ஓடினார். ஸ்வாமி, ஸ்வாமி என்று அவரை அழைத்தபடி பகவானும் பின்னாலேயே வந்தார். அவரோ தம் வசமின்றி ஓடிக் கொண்டிருந்தார்.*

*அப்போது தான் இந்த அதிசய நிகழ்ச்சி நடந்தது. வாட்டசாட்டமான தண்டபாணி ஸ்வாமி தாங்கிக் கொள்ள முடியாதபடி ஒரு பலத்த அடி அவர் முதுகில் விழுந்தது. அவர் தடுமாறிப் போய் பிடியை விட்டார். சின்ன ஸ்வாமி தம் ஆஸ்ரமம் திரும்பினார்.*

*இப்படி தன் முதுகில் அடித்தது யார் என்று திரும்பினார் தண்டபாணி ஸ்வாமி. திகைத்த அவர் கண்களில் நீர் நிறைந்தது. அவரை அடித்தது கருணைக் கடலான பகவானின் கை. பகவானும் கண் கலங்கி, என்ன*

பண்ணலாம் ஸ்வாமி? பிச்சை ஒன்றும் அறியாத அப்பாவி, நீதான் அவனைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அம்மா சொல்லிவிட்டுப் போய்விட்டாளே! என்று மென் குரலில் கூறினார்.

துறவி வேந்தனாகிய பகவான், உலக வாழ்வில் அனைவருக்கும் பாடமாக, அம்மாவிடம் பொறுப்பு ஏற்ற பின் என்ன பண்ணலாம் என்று கேட்ட பின் அஹந்தை அற்ற ஞானி உலகில் என்னவும் பண்ணலாம் என்று அடித்துக் கூறி விட்டார். அவர் வாழ்க்கையில் கொடுத்த ஒரே அடியை ஏகபோகமாக பெற்ற தண்டபாணிக்கு அதிருஷ்டம் அடித்தது என்று தான் கூற வேண்டும். அந்தப் பிரஸாதமான அடியில் தண்டபாணி ஸ்வாமியின் வினைகள் முற்றும் அடிபட்டுப் போயின.

மற்றொரு நிகழ்ச்சி பகவானின் தொண்டரான குஞ்சு ஸ்வாமிகளும் சம்பந்தப் பட்டது. தினமும் அதிகாலையில் ஆட்டுரல் ஊழியத்தை தண்டபாணி ஸ்வாமி, பகவான் இருவர் மட்டுமே செய்து வந்தனர். சமையல் கட்டு நிர்வாகம் செய்த தண்டபாணி ஸ்வாமி சில நாட்கள் தொடர்ந்து காரத் துவையல் தயாரிப்பில் ஈடுபட, பகவானும் அரைப்பில் கை கொடுக்க வேண்டி வந்தது. அதனால் மென்மலர் போன்ற அவரது வலது கை விரல் கொப்பளம் கண்டது. பாதாள லிங்க அறையில் வண்டுகள் தொடையைத் துளைத்த போதும் பொருட்படுத்தாத பகவான், இதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து பணியில் ஈடுபட்டு வந்தார்.

ஆனாலும் இதைப் பார்த்துவிட்ட குஞ்சு ஸ்வாமி தண்டபாணி ஸ்வாமியிடம், இன்னும் சில நாட்களுக்கு துவையல், சட்டினி விவகாரம் வேண்டாமே! என்று விண்ணப்பித்தும் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாத தண்டபாணி ஸ்வாமி, அந்த வகையறாக்களையே மீண்டும் தொடர்ந்தார்.

புண் பட்ட பகவானின் கையால் அரைபட்ட


குஞ்சு ஸ்வாமி

துவையலை நாம் உண்பது அபசாரம் என்று எண்ணிய குஞ்சு ஸ்வாமி, பகவானிடம் நீங்கள் இப்படி அரைக்க வேண்டாமே! என்று வேண்டினார். பகவான் அந்த வேண்டுகோளை ஏற்காமல் புன்னகை பூத்தார். அப்படியானால் பகவான் அரைப்பதை நான் சாப்பிட மாட்டேன். நான் சொல்வதை நீங்கள் கேட்பதே இல்லை என்று கூறி அன்று பலகாரத்தை குஞ்சு சுவாமி மறுத்தார். மறுநாளும் பகவான் அரைத்த துவையல் வந்து பரிமாறப் பட, குஞ்சு சுவாமி அதனையும் உண்ண மறுத்தார். இது அவரது சத்யாக்ரஹம். தான் சொல்வது குரு நாதன் கேட்க வேண்டும் என்ற காரணத்திற்காக சத்யாக்ரஹ நடவடிக்கையா எடுப்பது? இது பகவானின் உபதேசத்துக்குப் பொருந்தாதல்லவா! சட்டினியின் காரம், தண்டபாணி ஸ்வாமியின் அதிகாரம் எல்லாவற்றையும் விட குஞ்சு ஸ்வாமி அறியாமலே ஆளாகிவிட்ட இந்த மெல்லிய அஹங்காரத்தை பகவான் நீக்க விரும்பினார். ஆயினும் இதனை நேரடியாகக் கூறாமல், தனது நுண்மை விளையாட்டைத் தொடர்ந்தார். பகவான் அடுத்த சாப்பாட்டு வேளையின்போது குஞ்சு ஸ்வாமியைக் கூப்பிட்டு அனுப்பி என்ன ஒய்! நான் சாப்பிடலாமா? என்று அனுமதி கேட்டார். மறுபடியும் இரவு படுத்துக் கொள்ளலாமா? என்று அனுமதி கேட்டார். மறைமுக போதனை மறுநாளும் தொடர்ந்தது. நான் குளிக்கலாமா, சாப்பிடலாமா, வெளியே போகலாமா? என்று குஞ்சு சுவாமியின் அனுமதி பெறாமல், தாம் ஒரு காரியமும் செய்யாதது போல் காட்டினார். குரலில் பவ்யத்தோடு, ஒரு நாடகமே ஆடிக் காட்டினார் பகவான்.

*ஆனாலும் குஞ்சு சுவாமிக்கு அது புரியவில்லை. இதென்ன பகவான் ஒவ்வொன்றையும் சிஷ்யனிடம் கேட்டுச் செய்கிறார் என்று வியந்த அன்பரிடம் பகவான் கூறினார்: "ஆமாம் இவர்கள் சொன்னபடி தான் நான் கேட்டாகணும், கேட்காட்டா இவங்க சாப்பிட மாட்டாங்க, வரப்போ எல்லாரும் சாதுவாகத்தான் வருகிறார்கள், நாளா வட்டத்திலே இந்த ஸ்வாமிக்கு போறாது என்று கண்டு கொண்டு அப்புறம் சரி பண்ணுவதற்காக ஸ்வாதீனமாக செயல்படுகிறார்கள், அவங்க சொன்னபடி தானே ஸ்வாமி கேட்கணும்" என்றார்.*

*பகவான் தனது அஹங்கார நிவர்த்திக்காக செய்யும் இந்த விளையாட்டைக் குஞ்சு சுவாமியால் தாங்க முடியவில்லை. ராம கிருஷ்ண ஸ்வாமியிடம் பகவானை வேதனை செய்து விட்டேன்; என் மனமும் அமைதியாக இல்லை, மன மாறுதலுக்காக சில நாட்கள் திருப்பதி போய் வருகிறேன், மாலை ஆறரை மணி வண்டியில் போகிறேன் என்றார்.*

*ரமணரிடமிருந்து வேங்கட ரமணனிடம் செல்லக் குஞ்சு சுவாமி ஆயத்தமானார். அன்று பிற்பகல் மூன்று மணி அளவில் பகவான் திடீரென கிரிப் பிரதட்சிணத்திற்குக் கிளம்பினார். எல்லோரும் வரலாமே என ஆஸ்ரம அன்பர்களை அழைத்தார். அருணாசலத்தை கருணாகர பகவானுடன் வலம் வரும் அரிய வாய்ப்பைக் கைவிட மனமில்லாத குஞ்சு சுவாமி ரெயிலுக்குத் தான் நிறைய நேரம் இருக்கிறதே; மலையைச் சுற்றிக்கொண்டே முக்கால் வழியில் அப்படியே ஸ்டேஷனுக்கு சென்று விடலாம் என்று தன் மூட்டையை எடுத்துக் கொண்டு பிரதக்ஷிண கோஷ்டியில் சேர்ந்து கொண்டார்.*

*பகவானின் விளையாட்டு தொடங்கியது. எப்போதும் மெதுவாக வலம் வரும் பகவான், அன்று வழக்கத்தை விட நிதானமாக நடக்கிறார். நாலு, ஐந்து என மணி ஓடிக் கொண்டிருந்தது. இவர் பகவானைத் தாண்டி ஓடி முன்னே*

*செல்ல முடியாது. வடக்குப் பக்கத்தில் குபேர லிங்கத்தின் அருகில் வரும் போதே கூவென குரல் கொடுத்துக் சென்று விட்டது ரெயில்.*

*சட்டென் பகவான் குஞ்சு சுவாமியைத் திரும்பிப் பார்த்தார். அன்பில் மலர்ந்த சிரிப்புடன் அதோ பார், உன் ரெயில், சீக்கிரம் போ! ஓடினால் பிடிக்க முடியாது பறந்து போய்ப் பிடி, என்றார். அனைவரும் சிரித்தனர்.*

*அனைவரும் ஆஸ்ரமம் திரும்பினார். அப்போதுதான் குஞ்சு சுவாமிக்குப் புரிந்தது. எத்தனை அன்பிருந்தால் பகவான் தன்னை வெளியே செல்லாமல் தடுத்தாட் கொண்டிருப்பார் என்று எண்ணிய குஞ்சு சுவாமியின் நுண்ணிய அஹங்காரமும் அகன்றது. அவர்தம் வேண்டுகோளின் படி தண்டபாணி ஸ்வாமி பகவானிடம் பகவானுக்கு வேதனை அளித்து விட்டோமோ? என்று குஞ்சுவுக்கு மிகவும் கவலை மன்னிப்பு கேட்டுக் கொள்கிறான் என்று கூறினார்.*

*குஞ்சுவின் அஹங்காரம் முற்றும் நீங்கியது என்றறிந்த பகவானின் வாயிலிருந்து வார்த்தைகள் அன்புப் பெருக்காய் வந்தன. அவன் என்ன தப்பு பண்ணிட்டான் மன்னிப்பு கேட்க. நம்ம பகவான் கை கொப்பளித்து விட்டதே என்று அவனுக்குத் தாங்கவில்லை, அப்படி அரைச்சதை சாப்பிட அவனுக்கு மனசு வரலை, இதுலே கோபித்துக் கொள்ள என்ன இருக்கு? திருப்பதிக்குப் புறப்பட்டானாம், இந்த மஹா புத்திசாலி! திருப்பதியிலே போய் என்ன சாப்பிடுவான்? அங்கே என்ன கிடைக்கும் இவனுக்கு? இது மட்டுமல்ல என்று தொடர்ந்தார், அன்னிக்கு மலையாள ஸ்வாமி இவன் கையைப் பிடிச்சு ஒப்படைச்சு, இந்தப் பையனைக் கைவிடாம காப்பாத்துங்கோ! என்று சொல்லிட்டுப் போனாரே, அவர் என்னிக்காவது வந்து குஞ்சு எங்கே என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்றது? இவன் போறானாம் திருப்பதி! என்றார் பகவான்.*



டி.கே. சுந்தரேச ஐயர்

இதே போன்று பகவானின் மற்றொரு விளையாட்டு டி.கே.எஸ். எனப்படும் டி.கே. சுந்தரேச ஐயருடன் நடைபெற்றது. திருவண்ணாமலை பள்ளி ஆசிரியராக இருந்த அவர், பகவானின் அதி தீவிர பக்தர். ஆஸ்ரமத்தில் உணவு உண்ணுபவர். ஒரு முறை சின்ன ஸ்வாமியிடம் ஒரு பிணக்கு ஏற்பட்டது. எனவே ஆஸ்ரம உணவு உண்ணாமல் நாள் முழுவதும் பட்டினி கிடந்தார். மறு நாள் காலை கடும் பசி. ஊருக்குள் போய் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று எண்ணினார். அப்போது சமையல் கூடத்தில் இட்லி வார்த்துக் கொண்டிருந்த பகவானிடம் போய், பள்ளிக் கூடத்திற்கு நேரமாகிவிட்டது, போய் வருகிறேன் என்றார்.

பகவானோ, இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை ஓய் இன்று ஏது ஸ்கூல் என்றார். மாட்டிக் கொண்ட டி.கே.எஸ். இல்லை, ஸ்பெஷல் கிளாஸ் என்றார். அவர் எதற்காகப் போகிறார் என்பதை நுண்ணுணர்வால் ஏற்கெனவே அறிந்திருந்த பகவான், ஸ்பெஷல் கிளாஸ் பற்றி என்னிடமே கூறுகிறீரா என்று சிரித்தார். தானே 1896ஆம் ஆண்டு ஸ்பெஷல் கிளாஸ் என்று சொல்லிதானே மதுரையிலிருந்து கிளம்பி வந்தார். கொல்லன் தெருவிலேயே ஊசி விற்பனையா? டி.கே.எஸ்.ஸை உட்காரச் சொல்லி இன்று நான் ஸ்பெஷலா ஒரு சாம்பார் செய்திருக்கிறேன், முதலில் நீர் சாப்பிட்டுப் பாரும் என்று டி.கே.எஸ் முன் ஓர் இலை போட்டு அதில் சாம்பாரைப் பொழிந்தார். சாப்பிடும் ஓய்! என்று பக்கத்திலிருந்து அன்பாகப் பேசினார். அப்புறம் கேட்பானேன்! ஆயிரம்

*சண்டைகள் வரட்டுமே! ஆஸிரமத்திலிருந்து போவாரா டி.கே.எஸ். இதுவல்லவா பகவானின் விளையாட்டு.*

*பகவான் நம்மை எப்படி வழி நடத்துகிறார்*

*ஸ்வபுத்யை யோஜயந்ததிம் என்கிறது ஸ்ம்ருதி அவன் நம் புத்திக்குள்ளே பிரவேசித்து ஆன்மிக வழியில் செல்லச் செய்வான்*

*நிலைதந்த தாரகனாய்*
*நியமிக்கும் இறைவனுமாய்*

*என்று வேதாந்த தேசிகன் கூறுவது போன்று, தனக்குத் தேவை இல்லாவிடினும், நமக்கு நிலை தருவதற்காக பகவான் இந்த விளையாட்டுகளை ஆடினார். ஆயினும் அவற்றால் அவர் எள் அத்தனையும் பாதிக்கப் படுவதில்லை என்பதைக் கண்டோமல்லாவா?*

*கருத்துப் பரிமாறலைத் தொடர்வோம்!*

*பகவான் பணியில் தங்கள்,*

*ராம் மோஹன்*

*ரமண இணையதளங்கள்*

Sri Ramanasramam, Tiruvannamalai
www.sriramanamaharshi.org

Arunachala Ashrama, New York
http://www.arunachala.org

Ramanalayam, Chromepet and for Ramanodhayam issues
www.ramanalayam.org

# ஸ்ரீ ரமண மஹாவாக்யம்

## பிர. கிரிதர ஜெகதீஷ்

எந்த ஒரு வாக்கியம் ஜீவனையும், ஈச்வரனையும் அடிப்படையில் ஒன்று என்று சொல்கிறதோ அந்த வாக்கியத்திற்கு மஹாவாக்யம் என்று பெயர்.

சாஸ்திரங்கள் எத்தனையோ கருத்துக்களை பேசியிருக்கின்றன. ஈச்வரனைப் பற்றியும், ஜீவனைப் பற்றியும், ஜகத்தைப் பற்றியும் விரிவான பல கருத்துக்கள் வேதங்களில் பரவிக் கிடக்கின்றன.

வேதங்களின் துணையில்லாமல் ஏற்கனவே நமக்குத் தெரிந்த விஷயங்களையே மீண்டும் வேதமே நமக்குக் கூறினால் அந்த வாக்கியங்களை அனுவாத வாக்யங்கள் என்று சொல்வார்கள்.

நமக்குத் தெரியாததை சாஸ்திரம் கூறினால் அதை ப்ரமாண வாக்யம் என்று கூறுவார்கள்.

நமக்குத் தெரிந்த விஷயத்தை வைத்து நமக்குத் தெரியாததைப் புகட்ட சாஸ்திரம் விரும்புகிறது.

சாஸ்த்திரங்களின் உள்ளக்கிடக்கை நம்மை நாம் பர பிரம்மம் என்று உணர வைப்பதே ஆகும்.

ஜீவ பிரம்ம ஐக்ய ஞானம்தான் சாஸ்திரங்களின் பிண்டார்த்தம், அதாவது சாரம்.

ஒரு மஹாவாக்யத்தின் சாரத்தை ஒரு ஆத்மசாதகன் ஜீரணம் செய்தால் சாஸ்திரத்தின் நோக்கம் நிறைவேறிவிட்டது என்று அர்த்தம்.



இதில் குருவின் பங்கு மிக மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது.

உணவுதான் பசியைப் போக்குகிறது என்றாலும் அதில் சமைப்பவரின் பங்கு முக்கியமானது அல்லவா? ஆரோக்கியத்திற்கு ஏற்ற நல்ல உணவைத் தருவது தானியங்கள், காய்கறிகள்தான் என்றாலும் அதைத் தகுந்த உணவாக எடுத்து வழங்குகின்ற பக்குவம் சமைப்பவரின் கையில்தான் உள்ளது.

அதுபோல சாஸ்திரங்கள் எத்தனையோ அறிவுகளை உடையதாக இருந்தாலும் எந்த ஒரு அறிவு நம்முடைய மரண பயத்தைப் போக்குமோ, நம்முடைய சாஸ்வதமான ஆனந்த ஸ்வரூபத்தை நமக்கு மீட்டுத் தருமோ அந்த ஒரு அறிவை அடையாளம் காட்டித் தருபவர்தான் குரு.

பாலின் சாரம் வெண்ணெய் என்பதுபோல் வேதங்களின் சாரம் நம்மைப் பற்றிய ஸ்வரூப ஞானம்.

அந்த ஸ்வரூப ஞானம் என்ற வெண்ணெயைக் கடைந்தெடுக்கும் மத்துதான் குரு.

ஸ்ரீ ரமண உபதேசங்களை உற்று நோக்கினால் நம்மை நமக்குள் உள் திரும்பத் தூண்டும் வார்த்தைகளையே அதிகம் பார்க்க முடியும்.

உதாரணமாக ஒரு சாதகன் பகவான் ரமணரிடம் ஈச்வரன் இருக்கிறாரா? இல்லையா? என்று கேட்கிறான்.

பகவான் பதில்: ஈச்வரன் இருக்கிறாரா? இல்லையா? என்று கேட்கிற நீ யார் என்று பார். ஈச்வரனைப் பற்றிய விளக்கம் உனக்குத்தானே விளங்கும்.

சாதகனின் கேள்வி: ஈச்வரனை நான் அறிய முடியுமா? முடியாதா?

பகவான் பதில்: ஈச்வரனை நான் அறிய முடியுமா, முடியாதா என்று கேட்கிற நான் யார்? அதாவது கேள்வி கேட்கின்ற நீ யார்? என்று பார்.

இங்கே என்ன நடக்கிறது என்று ஆராய்வோம்.

கேள்வி ரூபமாக எழுகின்ற எண்ணத்தை அது எங்கிருந்து எழுகிறதோ அந்த இடத்திற்கே மீண்டும் திரும்பி தன்னிலையில் அடங்க வைக்கிற சிகிச்சையை பகவானின் உபதேசங்களில் காணலாம்.

ஈச்வரனைக் குறித்த ஆராய்ச்சியை தத்பத விசாரம் என்றும், ஜீவனைக் குறித்த அதாவது நம்மைக் குறித்த ஆராய்ச்சியை த்வம் பத விசாரம் என்றும் ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் அடிப்படையாய் உள்ள தன்மையைக் குறித்த ஆராய்ச்சியை அஸிபத விசாரம் என்றும் கூறுவது மரபு.

இதில் த்வம் பத விசாரமே மிக முக்கியமாக கருதப்படுகிறது. ஜீவனைக் குறித்த விசாரமே பந்த மோக்ஷத்தைக் குறித்த ஞானத்தை வழங்குவதில் முதன்மை பெறுகிறது.

ரமணரின் உபதேசங்களில் இதை நன்கு அனுபவிக்கலாம்.

*நான்உதியாது உள்ளநிலை நாம்அதுவாய் உள்ளநிலை*
*நான்உதிக்கும் தானம் அதை நாடாமல் நான்உதியாத்*
*தன்இழப்பைச் சார்வதுஎவன் சாராமல் தான்அதுவாம்*
*தன்னிலையில் நிற்பதுஎவன் சாற்று.*

பொருள்: நான் என்கின்ற அகந்தை எழுகின்ற இடமே நமது இயல்பாம் ஆத்ம ஸ்வரூபம் இருக்கும் நிலையாகும். அந்த நான் என்கின்ற அகந்தை உதிக்கின்ற இடத்தை விசாரித்து அதை ஒடுக்க வேண்டும். அப்படியில்லாமல் அகந்தையின் நாசம் எங்கே? ஆத்ம தரிசனம் எங்கே?

பரம்பொருள் என்ற பெரிய சமுத்திரத்தில் ஜீவனாகிய ஒரு நீர்க்குமிழி மிக மிகச் சிறியது என்றாலும் அந்தச் சிறிய நீர்க்குமிழியைப் பிடித்துக்கொண்டு பிரயாணம் மேற்கொண்டால் அது நம்மைச் சமுத்திரத்தோடு இரண்டற்றதாக உணர வைக்கிறது.

சூரியன் கண்ணாடியில், நீர்த்தேக்கத்தில் பிரதிபலிக்கும்பொழுது அந்தக் கண்ணாடியின் அளவிற் கேற்ப, அந்த நீர்த்தேக்கத்தின் பரப்பிற்கு ஏற்ப தன் சொரூபத்தை வெளிப்படுத்துகிறது.

அதுபோல மாயா காரியங்களான ஸ்தூல, சூக்ஷ்ம சரீரங்களின் வழியே தன் சொரூபத்தை வெளிப்படுத்தும் பொழுது பரம்பொருளே அகங்காரமாக, சிறிய நானாக தோன்றிக் கொண்டிருக்கிறது.

அதனால்தான் பகவான் ரமண மகரிஷி கடவுளைத் தேடி அடைதல் என்பது திருடனே திருடனாகி தன்னைப் பிடிக்கும் முயற்சி என்று கூறுவார்.

ந ப்ரமேயம் ஸ்வப்ரகாசம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

அது முன்னிலைப் பொருள் அல்ல. ஸ்வயமாக நான் நான் என்று விளங்கிக் கொண்டிருக்கிறது என்பது ரமணரின் உபதேசம்.

மனதில் அனுபவிக்கும் தன்னிறைவு இன்மையை சாஸ்திரம், சம்ஸாரம் என்று கூறுகிறது. சம்ஸாரத்திற்கு மூலகாரணம் அஞ்ஞானம். எதைப் பற்றிய அஞ்ஞானம் என்றால், நான் ஐ பற்றிய அஞ்ஞானம்.

நாம் ஒருவரோடு பல வருடங்கள் நெருங்கிப் பழகுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவரோடு சாப்பிடுகிறோம். பேசிச் சிரிக்கின்றோம். பரஸ்பரம் உதவி செய்து நண்பராக இருக்கிறோம். அந்த நண்பருடைய பெயர், ஊர் என்ன என்று யாராவது கேட்டு அதற்கு நாம் தெரியவில்லை என்று பதில் கூறினால் நம் நிலையை என்ன என்று கூறுவது?

அதைப்போன்ற பரிதாப நிலைதான் ஜீவனின் குறிப்பாக மனிதனின் நிலை. நான் நான் என்று நம்மிடம் எண்ணற்ற முறை ஈசன் கையசைத்துக் கூப்பிட்டும் நாம் அதைக் கண்டு கொள்ளாமல் நின்று கொண்டிருக்கிறோம்.

மகரிஷியின் அபிப்ராயம் இதுதான்.

எந்த இடத்தில் அகங்காரம் தலை சாய்கிறதோ அங்கு ஈசனின் தரிசனம் நிகழும். ஆனால் அகங்காரத்தைத் தலை சாய்க்க அது என்ன என்று பார்ப்பதைத் தவிர்த்து அகங்காரமற்ற ஆத்ம அனுபவத்திற்கு வேறு வழி இல்லை.

ஒரு பெரிய கணித அறிவைத் தன் உள்ளே அடக்கிக் கொண்டுள்ள சூத்திரம் போல நான் என்ற தத்துவம் ஜீவர்களிடம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

சூத்திரத்தை எடுத்து விளக்கும்பொழுது அதன் அறிவு வெளிப்படுவதுபோல, நான் என்ற குற்றுணர்வின் தோற்றத்தை அணுகும்பொழுது அது நம்மை பேருணர்வில் சேர்த்து மறைந்து விடுகிறது என்கிறார் பகவான்.

தன்மை உண்டேல் முன்னிலை, படர்க்கை தான் உண்டு

ஆழ்ந்த உறக்கத்தில் நான் என்ற எண்ணம் துளியும் இல்லை. அதனால் உலகம் இல்லை. உலகைப் படைத்த ஈச்வரனைக் குறித்த சர்ச்சையும் இல்லை.

உறக்கம் கலைந்து நான் என்ற ஒன்று எழுந்தவுடன் உலகம் தோன்றுகிறது. ஈசன் இருக்கிறார் அல்லது இல்லை என்ற ரூபமான பிரச்சினைகளும் தோன்றுகின்றன.

**மய்யவே ஸகலம் ஜாதம் மயிஸர்வம் பிரதிஷ்டிதம்**
**மயிஸர்வம் லயம் யாதி தத் பிரம்மாத்வய மஸ்ம்யஹம்**

என்னிடத்திலிருந்தே அனைத்தும் தோன்றின. என்னையே அனைத்தும் சார்ந்துள்ளன. என்னிடமே மீண்டும் அனைத்தும் ஒடுங்குகின்றன. நான் அந்த இரண்டற்ற பிரம்மாக இருக்கிறேன் என்பது கைவல்ய உபநிஷத் தரும் உபதேசம்.

ஒரு நடிகனே மூன்று வேடத்தில் நடிப்பது போல அகண்ட சச்சிதானந்த பிரம்மமே நானாக, உலகமாக, இந்த இரண்டிற்கும் தலைவனான ஈச்வரனாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது என்பது ரமணரின் முடிவு.

நான், உலகம், கடவுள் இந்த மூன்று பொருள்களில் நம் கைவசம் உள்ள பொருள் நான். ஏனைய இரண்டை உலகம், கடவுள் பற்றிய ஞானப் பொக்கிஷத்திற்கு உரிய திறவுகோலாக இந்த நானைப் பயன்படுத்தும் முறையை பகவான் நமக்குக் கற்றுத் தருகிறார்.

கட்டுப்பாடற்ற ஒரு வண்டியில் அமர்ந்து பயணம் செய்யும் பாதுகாப்பற்ற ஒரு பயணியைப் போன்று ஜீவன் இருக்கிறான். உண்பது, உறங்குவது, செயல்படுவது, நோய்வாய்ப்படுவது, மரணம் அடைவது என்ற அனைத்து மாயா அம்சங்களில் நான்-ஐ சம்மந்தப்படுத்தி மதி மயங்குகிறான்.

துன்பம் வேண்டாம். ஆகவே பந்தம் வேண்டாம் என்பது அனைத்து மதங்களின் சம்மதம்.

*பாமரர் முதல் பண்டிதர் வரை பந்தம் அற்ற நிலையை நாடுகிறார்கள்.*

*பகவான் கூறுகிறார்: நான் பந்தமுடையவன் என்று எண்ணுகிற மட்டும் பந்த முக்தி சிந்தனையும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பந்தம் உடையவன் யார் என்று விசாரித்து தன்னை அறியுங்காலத்தில் நித்யமுக்தனாகிய தான் ஒருவனே அபரோக்ஷமாக விளங்குவது தெரியவரும். அங்கே வேறு எதுவும் எஞ்சியிருக்காது.*

*ஒன்று இரண்டு என்று ஆரம்பிக்கிற புள்ளிகள் பல நூறாக விரிந்து ஒரு பெரிய கோலமாகி விரிவது போல நான் என்ற ஒரு தத்துவமே உலகமாக, இறைவனாக தோன்றிக் கொண்டிருக்கிறது என்பது பகவானின் போதனை.*

*தன்னைத்தான் பார்த்தால் கடவுளைப் பார்த்தல் என்பது ரமண மஹாவாக்யம்.*

*கங்கையிலிருந்து பிரிந்து ஒரு சிறு நீர்த்தேக்கமாக இருக்கிற ஒரு குட்டையை மீண்டும் கங்கை வழியே திருப்பி கங்கோத்ரிக்கே சென்று ஒடுங்க வைக்கிறது மகரிஷியின் சூத்திரம்.*

*இயல்பாக நம்மிடம் இருக்கிற நான் என்ற குற்றுணர்வை அதனுடைய மூலஸ்தானத்தில் சேர்ப்பித்து பிறவிக்கடலை ஒரு கணத்தில் போக்கி சுத்த விழிப்பு என்னும் பேருணர்வு கரையில் நம்மைக் கொண்டு சேர்க்கிறது ஸ்ரீ ரமண மஹாவாக்யம்.*

# மோன சன்னிதியின் மகிமை

## வி.நிரஞ்சன்

*வாக்கு மனம் கடந்தது பகவானின் மோன சன்னிதி. பற்றற்று நிற்கும் பக்குவத்தில் உயர்ந்த சீலர்களை வாக்கு மனம் கடந்த மெய்ஞான நிலையில் ஆழ்த்த வல்லதும் ஆகும். இதற்கு விளக்கமாக இருப்பது மஸ்தான் சுவாமி அவர்கள். பகவான் தனது திருவாயாலேயே மஸ்தான் அவர்களின் அதி உயர்ந்த பக்குவ நிலையை விசுவநாத சுவாமிகளிடம் தெரிவித்து இருக்கின்றார். எந் நேரமும் மரத்திலிருந்து விழுந்து விடுவதற்குத் தயாராய் இருக்கும் அதிபழுத்த பழம் போன்றது அவர் நிலை; ஞானி ஒருவரைக் கண்ட மாத்திரத்திலேயே மெய்ஞான நிலையில் நிட்டை உற்றுவிடுகின்ற நிலை அவரது என்று பகவானே மஸ்தான் சுவாமிகளுடைய சுத்த மன நிலையை உறுதி செய்திருக்கின்றார். தன்னை முன்னிலைப் படுத்தாத அவரது பெரும் பணிவு உடைமையையும் பகவான் புகழ்ந்து குறிப்பிட்டிருக்கின்றார்.*

மோனத்தின்பால் ஈர்க்கப்பட்டு மோனமயம் ஆனவர்கள் பலர் இருந்திருக்கலாம். ஆனால் ஒரு சிலரே நமக்குத் தென்படுகின்றனர். பலர் நமது பார்வைக்குத் தென்படாமலேயே சகஜ ஆன்ம நிலையிலேயே நீடித்து உடலை உரியகாலத்தில் விட்டுச் சென்றிருக்கலாம். அவர்களை உலகு அறியாது. ஆனால், பகவான் கூறுவது போல், ஆன்மஞானி ஒவ்வொருவருடைய வாழ்வும் உலகிற்குக் கிடைக்கும் பேரருள் ஆகும். உலகு

அறியாமலேயே உலகிற்கு அருள் புரிய வல்லது ஞானியின் சன்னிதி. பகவான் கூறிய ஒரே ஒரு சொல்லால் மோனத்தின் பால் ஈர்க்கப்பட்டு ஆன்ம நிட்டர் ஆனவர் திண்ணை சுவாமிகள். 2012 திண்ணை சுவாமிகளின் தூல உடல் தோற்றத்தின் நூறாவது ஆண்டாகும். அவரது நினைவைப் போற்றி வணங்கும் காணிக்கையாகும் இக் கட்டுரை.

1947க்குப் பிந்திய காலத்தில் தான் கோயம்புத்தூரைச் சேர்ந்த ராமசுவாமி என்பார் பகவானைக் காண வருகின்றார். 12/12/1912 அவர் பிறந்த நாள். அவரது குடும்பத்தில் பலர் மருத்துவர்களாகவும் வழக்கறிஞர் களாகவும் இருந்தனர். இவரும் சென்னை மருத்துவக் கல்லூரியில் உயிர்வேதியியல் நிபுணராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். மனைவி ஜெயலக்ஷ்மியுடன் மூன்று குழந்தைகளோடு அவர் சென்னையில் வசித்துவந்தார். முதலில் மூன்று முறை பகவானைக் காண வந்திருக்கின்றார். சிறிது காலமே அவரது சன்னிதியில் இருந்துவிட்டுத் திரும்பியிருக்கின்றார். பின்னர் 1948ல் அவர் அவரது கல்லூரியினால் அமெரிக்காவிற்குச் சென்று மேற்படிப்பு மேற்கொள்வதற்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்றார். ஆனால் சிறிது காலம் கழித்து அவரது பெயர் நீக்கப்பட்டு அவரை விட பணியில் இளையவரான வேறு ஒருவருக்கு அவ்வாய்ப்பு கொடுக்கப் படுகின்றது. அரசியல் செல்வாக்கின் தலையீட்டினால் தனக்குக் கிடைத்திருந்த வாய்ப்பு மறுக்கப்பட்டது அவரது மனதைப் பெரிதும் பாதித்தது. அதன்விளைவாக அவர் தனது வேலையையே விட்டுவிடுகின்றார்.

இந்தச் சூழ்நிலையில் தான் அவர் திருவண்ணாமலை வருகின்றார். மனைவியிடம் பாண்டிச்சேரியில் தனக்கு ஏற்ற வேலை ஒன்றினுக்கு விண்ணப்பிக்கப் போவதாகவும் கூறினார். பகவானை வந்து அடைந்தவர் பகவானது சன்னிதியில் இருப்பதுவும் மலைவலம் வருவதுமாகவே

வழக்கமாகக் கொண்டிருந்தார். சிறிது காலம் கழித்து மனைவியையும் குழந்தைகளையும் திருவருணைக்கு அழைத்துக் கொண்டார். இக் காலகட்டத்தில் தான் அவர் பெருமளவு மனமாற்றம் அடைந்திருந்தார். ஒரு முறை உணவிற்காக வீட்டிற்கு வருவது மிகுந்த தாமதம் ஆயிற்று. அப்பொழுது அவருடைய அன்னையார் தாமதத்திற்கான காரணத்தைக் கேட்கும் முகமாக அவரிடம், சுவாமியைப் பார்க்கப்போயிருந்தனையா? என்று வினவினர். அதற்கு அவர், சுவாமியைப் பார்ப்பதில் மட்டும் என்ன பயன் அம்மா? நாமும் சுவாமி ஆகிவிடவேண்டும், என்று பதில் அளித்திருக்கின்றார். மெய்ஞான நிலையில் நிட்டை உறுவதற்கான வைராக்கியம் அவரிடம் திடப்பட்டு இருந்தது அவரது பேச்சில் தெளிவாயிற்று. நான்காவது மகவிற்கான பேறுகாலம் நெருங்கவே தனது மனைவியைப் பிள்ளைகளோடு தனது மாமனாரின் இருப்பிடம் ஆகிய கோலாருக்கு அனுப்புகின்றார்.

தான் மட்டும் தனியாகத் திருவண்ணாமலையில் இருந்துவருகின்றார். அப்பொழுது அவருக்கு முருகனாரிடம் தொடர்பு ஏற்படுகின்றது. பகவானின் சன்னிதியும் மலைவலமுமாக நாட்கள் கழிகின்றன. அப்பொழுது ஒரு நாள் பகவானிடம் அவர் பாண்டிச்சேரியில் வேலை இருப்பது குறித்தும் அங்குச் செல்வது குறித்தும் அனுமதி வேண்டியிருக்கின்றார். அச் சமயம் பகவான் அவரை நோக்கி ஒரே ஒரு சொல், இரு என்று சொன்னார். இவ்வாறு பகவான் சொல்வது என்பது அரிதினும் அரிது. இதனை அங்கே பக்கத்தில் இருந்த முருகனார் அறிவார். பகவானுடைய கண்ணோக்கும் இரு என்னும் சொல்லும் ராமசுவாமி அவர்களுக்குக் கிட்டிய பேரருள் என்பது முருகனாருக்குத் தெளிவாயிற்று.

அன்றிலிருந்து ராமசுவாமியின் பேச்சு குறைந்தது. மனம் உள்முகமாகி ஆன்ம உணர்வில் நிலை கொள்ளலாயிற்று. அவர் உணவையும் மறந்து நெடு

நேரம் நிட்டையில் நீடிக்கலானார். பல நாட்கள் உணவில்லாது நிட்டையில் நிலைப்பதுவும், பின்னர் உணவிற்கோ மலைவலம் வருவதற்கோ மட்டும் வெளிவருவதுமாக இருந்தனர். நான்காவது குழந்தையும் பிறந்தது. இவரிடம் இருந்து செய்தி ஒன்றும் கோலாருக்கு வரவில்லை. ஆதல், அறிதல், செய்தல் முதலிய கன்மம் சற்றும் இன்றி நிர் விஷய சுத்த இருப்புணர்வில் ஒன்றிவிட்டார். சொன்மானத தனுவின் கன்மாதி சிறிதின்றிச் சும்மா அமர்ந்திருக்க அம்மா, அகத்தில் ஆன்ம சோதியே, நிதானு பூதியே, இராது பீதியே, இன்ப அம்போதியே என்று சும்மா இருக்கும் நிலையின் உயர்வை பகவான் ஆன்மவித்தை கீர்த்தனத்தில் விளக்குவதை நினைவுகூர்வோமாக.

என்னவாயிற்று என்று அறிய வந்த அவரது மைத்துனர் உடலையும் உறவையும் உலகையும் கடந்த உணர்வில் அவர் இருப்பதை அறியமுடியாதவராய் அவர் மன நலம் அற்று இருப்பதாக நினைக்கின்றார். அவரைக் கோலாருக்குக் கூட்டிச் செல்ல இயலாத நிலையில் ஊர் திரும்பி செய்தியினைச் சொல்கின்றார். இது கேட்ட அவரது மனைவி அவருடைய அகமுக வாழ்க்கைக்கு இடையூறில்லாமல் அவருக்கு உதவி வருவதற்காகக் குழந்தைகளோடு அண்ணாமலை வருகின்றார். ஆசிரமக் குருக்கள் கிட்டு அவர்களின் வளாகத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து ஜெயலக்ஷ்மி அம்மாளும் இளைய குழந்தைகள் இருவரும் இருந்துவர மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்கி இவர் பக்கத்தில் ஒரு குடிசையில் தங்குகிறார். மூத்த பிள்ளைகள் பாட்டனாருடன் தங்குகின்றனர். சிறிது காலம் கழித்து மூத்த பிள்ளைகளைத் தனது மனைவி கவனித்துக் கொள்வதே நல்லது என்றும் அதுவே உகந்தது என்றும் அறிவுறுத்தி ஜெயலக்ஷ்மி அம்மாவை இளைய குழந்தைகளோடு கோலாருக்கே அனுப்பிவிடுகின்றார். மனைவி குழந்தைகளுடனான இறுக்கம் அத்தோடு தளர்ந்தது.



திண்ணை சுவாமிகள்

விரூபாக்ஷ குகையை இருப்பிடமாகக் கொண்டார். ஆன்ம நிட்டா பரனாகவே இருந்த அவர் பல நாட்கள் உணவும் இன்றி வெளி வராது அங்கேயே அடங்கி இருந்தார். நிட்டை கலைந்து பசி அடங்கச் சற்றே உணவு தேவைப்பட்ட காலத்தில் எங்காவது பிச்சை எடுத்து உண்பார். பின்னர் ரமண நகரில் மட்டும் அவ்வப் பொழுது பிச்சை எடுத்து வந்தார். அதன் பின்னர் ரமண நகரில் இருந்த சி.பி. நாதன் அவர்கள் வீட்டில் மட்டுமே அன்னம் ஏற்று வந்தார். அச் சமயம் ஒரு நாள் சி.பி. நாதன் வீட்டிற்கு வந்த அவர், அம்மா, வெளியே மழை பெய்கின்றது. உங்கள் வீட்டில் நான் தங்கலாமா? என்று கேட்டிருக்கின்றார். பகவானின் அடியவர்களுக்கு அருந்தொண்டு ஆற்றும் பாக்கியம் பெற்ற அவர்கள் மனம் உவந்து, இது உங்களது வீடு. தாராளமாகத் தங்குங்கள், என்று வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து அவர் அவர்களது வீட்டுத் திண்ணையில் இருந்துவரலானார். இதன் பிறகே அவர் திண்ணை சுவாமிகள் ஆனார்.

இதில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தி என்ன என்றால், அவர் சொல்லியபடி அப்பொழுது மழை பெய்து கொண்டிருக்கவில்லை என்பதே. புரட்டாசி மாதம். வானத்தில் சூரியன் மேகங்கள் ஏதும் அற்று பிரகாசமாய் ஒளி வீசிக்கொண்டிருந்தது. ஆனால் சற்று நேரத்தில் கரு மேகம் சிறிது தோன்றி ஒரு சில துளிகள் வீழ்ந்தன. இதைக் குறிப்பிட்ட மைக்கேல் ஜேம்ஸ் இதற்கு ஒரு சிறப்பான விளக்கம் கொடுத்திருக்கின்றார். ஆன்ம உணர்வில் சதா நிட்டை உற்றிருக்கின்ற காரணத்தால்

திண்ணை சுவாமிகளின் தோற்றம் காண்போரின் கவனத்தை ஈர்த்தது. மக்கள் கூடத்தொடங்கினர். அவரோ குரு வாக்கின் படியும் அவரது அருளாலும் நிர் விஷய சுத்த அத்துவித பூரண உணர்வினராயே இருந்துவரலானார். ஆதலால் உலகின் பார்வை என்கின்ற மழைக்கு ஒதுங்குமுகமாக, உடற் பசி தீர்க்கும் ஒரே காரணத்திற்காக வெளிவரவேண்டிய கட்டாயத்தையும் தவிர்த்து விடுவதற்காக, திண்ணை சுவாமிகள் சி.பி.நாதன் வீட்டில் தங்குவதற்கு அனுமதி கேட்டார்.

அடியவரின் நலம் பேணி வரும் நல்லோராகிய சி.பி.நாதன் அவர்களின் குடும்பத்தினருக்கு அச் சமயம் பொருளாதாரம் மிகவும் குறைந்து இருந்தது. சி.பி.நாதன் பக்கவாதத்தால் தாக்குண்டு செயல் இழந்தார். சமையல் பாத்திரங்கள் சிலவற்றை விற்றே அக் குடும்பத்தினர் அடியவர்களுக்கு உதவி வரவேண்டியாயிற்று. இருக்கும் வீட்டிற்கு வாடகை தர முடியாமல் வீட்டைக் காலி செய்து வேறு இடத்திற்குப் போகவேண்டிய கட்டாயத்தில் அவர்கள் இருந்தனர். இச் செய்தியை திண்ணை சுவாமி அவர்களிடம் அவர்கள் சொன்ன பொழுது அவர் அவ் வீட்டிற்கு எதிரில் உள்ள ஓர் இடத்தைக் காண்பித்து, அதோ அந்த இடத்தில் உங்கள் வீடு வருகின்றது, என்றார். சிறிது காலம் கழித்து அக் காலி இடத்தின் உரிமையாளர் டேவிட் மக்கிவர் இருபது ஆண்டுகளுக்கு முன் தான் வாங்கியிருந்த அதே விலைக்கு அவ்விடத்தை அவர்களுக்கு விற்றார். அவர்களிடம் இருந்த பணம் அத்தனையையும் கொடுத்து அவர்கள் அந்த இடத்தை வாங்கினர். அதன் பிறகு பொருள் ஏதும் அற்ற அவர்கள் வீட்டை எப்படிக் கட்டுவது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். இது குறித்து சுவாமியிடம் தங்களது இயலாமையை எடுத்துச் சொன்ன சமயம் அவரோ, மூன்று சாதுக்கள் உங்களது வீட்டைக்கட்டித் தருவார்கள், என்று கூறுகின்றார். அவர் கூற்று மெய்ப்பட்டது. சாது ஓம் சுவாமியும், தேசூர் ரமணானந்த மடாலயத்தைச்

சேர்ந்த சுவாமி சங்கரானந்தரும், சுவாமி கிருஷ்ணானந்தரும் ஆகச் சேர்ந்து அவர்களுடைய வீட்டைக் கட்டி முடிக்கின்றனர். வீட்டின் முன் புறம் கூரை வேய்ந்து வராண்டாவையும் திண்ணையையும் எழுப்பினர். திண்ணை சுவாமிகள் அத் திண்ணையில் தான் தனது வாழ்நாள் முழுவதும் இருந்து வந்தார்.

அவரைப் பற்றி அழகான கட்டுரை எழுதி இருக்கும் மைக்கேல் ஜேம்ஸ் மேலும் சில அரிய தகவல்களைத் தருகின்றார். மைக்கேல் அவ்விடத்தில் இருந்த இருபது வருடங்களில் திண்ணை சுவாமிகள் திண்ணையை விட்டு வெளியே சென்றது ஓரிரு முறைதான் என்கின்றார். 1970 களின் பிந்தைய காலத்தில் ஒரு முறை வீட்டின் வெளிப்புறச் சுற்றுச் சுவரை ஒட்டி சில மணி நேரம் சுவாமிகள் உட்கார்ந்து இருந்தனராம். வேறு ஒரு முறை வீட்டின் பின்புறம் இருந்த கிணற்றிற்குச் சென்று வாளியில் நீர் எடுத்துத் தனது உடல் மேல் விட்டுக் கொண்டனராம். மைக்கேல் திருவண்ணாமலைக்கு வருவதற்கு முந்தைய காலத்தில் சுவாமிகள் சிற் சில சமயம் பாலிதீர்த்தத்திற்குச் சென்று குளத்தில் அமிழ்ந்துவிட்டு ஈரத் துணியோடு தண்ணீர் சொட்டச் சொட்ட அப்படியே திண்ணைக்குத் திரும்பி வருவாராம். பல ஆண்டுகளாக அவர் குளியாது இருந்த போதினும் குளியாத உடலுக்கு உண்டாகும் துர்நாற்றம் அவரது உடலில் இல்லாது இருந்தது.

1949லிருந்து டிசம்பர் 2003 வரை ஐம்பத்து நான்கு ஆண்டுகள் அண்ணாமலையை விட்டு அகலாது சும்மா இருந்த ஆன்ம நிட்டர் திண்ணை சுவாமிகள். தானும் சுவாமி ஆகிவிடவேண்டும் என்று கூறியவர் தனது குருசுவாமியைப் போலவே ஆகிவிட்டார். பகவான் 1896லிருந்து 1950 வரை ஐம்பத்து நான்கு ஆண்டுகள் அண்ணாமலையை விட்டு நீங்காமல் இருந்தனர் அன்றோ?

இவ் இடைக் காலத்தில் அவரது மனைவி பல முறை வந்து போயிருக்கின்றார். சுவாமிகள் சிறிது காலம் அவரது உதவியை ஏற்றுக் கொள்வார். அவர் எப்பொழுதெல்லாம் தனது உதவியை ஏற்றுக்கொள்ளவில்லையோ அப் பொழுது அதற்கு மேல் தான் தங்குவது வேண்டாம் என்ற குறிப்பை உணர்ந்து அம்மையார் நீங்கிவிடுவார்.

இரு என்கின்ற சொல்லை எப்படி எல்லாம் பொருள் கொள்ள முடியுமோ அப்படி எல்லாம் பார்த்தாலும் கூட சுவாமிகள் இருந்த நிலையை அறிந்து கொள்ள முடியாது. குருவிற்கும் சற்சீடருக்கும் இடையில் இருக்கும் உறவு யாராலும் முழுதும் அறிவு பூர்வமாகப் புரிந்து கொள்ளமுடியாத புனிதமும் மர்மமும் ஆனது. சொல் மனம் தனு இவை முற்றிலும் அடங்கிய நிலை. இந் நிலை நில்லாத யாரே அறிவார் இதனை?

ஒரு கால கட்டத்தில் பல ஆண்டுகளாக வளர்ந்து வந்த சடை தரையைத்தொடும் அளவிற்கு நீண்டுவிட்டது. கை கால் நகங்களோ நீண்டு வளர்ந்து பின் வளைந்து போய் அதன் பின்னர் வெளி முகமாய் வளர முடியாமல் உள் முகமாக வளர ஆரம்பித்தன. அதன் காரணமாக விரல்கள் புண்ணாயின. அப் புண்களில் ரத்தம் கசிய அதைச் சுற்றி சிவப்பு எறும்புகள் மொய்க்க மேலும் புண்ணாயின. அது வரை நகங்களை வெட்டச் சம்மதியாதிருந்த சுவாமிகளை அன்பர்கள் வருந்தி வேண்டிக்கொண்டதற்கு அப்பொழுது தான் சுவாமிகள் இணங்கினார். இது போலவே கண்ணில் பிறை வளர்ந்து மூடிக்கொண்ட காலத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்கு முயன்றனர். சுவாமிகள் அவர்களை அருகில் வரச் சம்மதியவில்லை.

மூப்படைந்த காலத்தில் அவர் உணவிற்காகவும் மலசலத்திற்காகவுமே திண்ணையில் இருந்து இறங்க வேண்டியிருந்தது. மற்ற நேரத்தில் எல்லாம் அவர் திண்ணையிலேயே சாய்ந்த வண்ணம் அமர்ந்திருப்பார். அன்பர்கள் வந்து வணங்கிச் செல்வர். ஆனால் அவரது

கவனம் புறச் சலனங்கள் ஏதாலும் பாதிப்படையாதிருந்தது. இருந்தும் அண்மையிலும் சேய்மையிலும் நிகழும் நிகழ்ச்சிகளை அறிந்தவராய் இருக்கின்றார் என்பது மிக அரிதாக வரும் அவரது சொற்களிலிருந்து ஊகிக்கமுடிந்தது. அவர் பேசிக் கொண்டிருந்த முந்தைய காலத்திலும் கூட அவரது பேச்சு புதிராகவும் மறைபொருள் கொண்டதாகவும் இருந்தது.

சும்மா இரு என்கின்ற உபதேசம் அருணகிரியாருக்குக் கிடைத்தது. அதையும் சுருக்கி பகவான் ஒரே சொல்லில் இரு என்று கூறி சுத்த இருப்பில் சுவாமிகளை இருத்தினர். இருப்பு அறிவிலேயே நிலைத்து இருந்த சுவாமிகள் 2003ம் ஆண்டு கார்த்திகைத் திருநாளுக்கு முந்தைய இரவில் அதிகாலை நேரம் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்த சமயம் யாரும் அறியா வண்ணம் யாருக்கும் இடையூறு இல்லா வண்ணம் திண்ணையில் சாய்ந்தவாறு இருந்தவாறே இரண்டற்ற பூரண உணர்வாயினர்.

நினைத்து நினைத்துப் பார்த்தாலும் திண்ணை சுவாமிகளின் சும்மா இருந்தமையை நம்மால் விளங்கிக் கொள்ள முடியாது. நிர் விஷய சுத்த மனதின் தன்மையை தூல சூக்கும விஷயங்களால் நிரம்பியுள்ள மனதைக் கொண்டு அறியமுடியாது. ஞானியை ஞானியே அறிவர். ஞானம் எண்ணத்தை அறியும்; ஆனால் எண்ணம் ஞானத்தை அறியாது.

தன்னை அழித்து எழுந்த தன் மய ஆனந்தருக்கு
என்னை உளது ஒன்று இயற்றுதற்கு? — தன்னை அலாது
அன்னியம் ஒன்றும் அறியார் அவர் நிலைமை
இன்னது என்று உன்னல் எவன்?

— (உள்ளது நாற்பது)

உன் இயல்பு இருத்தலே, நினைத்தல் அன்று என்று பகவான் தெளிவாய் எளிமையாய்ச் சொல்லியிருக்கின்றார். சுத்த இருப்பே முற்றறிவும், ஆனந்தமும் ஆம்.

அகந்தையாம் தன்னை அழித்து ஆன்மவாம் தன் மய ஆனந்தராகிய ஞானி கடமையாகவோ, சாதனையாகவோ, பொது நலம் கருதியோ செய்வதற்கு என்ன இருக்கின்றது? தானே சகலமுமாய்த் தன்னை அலாது வேறொன்றும் இலதாய் பூரணமாய்க் காலம் இடம் கடந்து நித்திய அறிவொளியாய் விளங்குபவன் ஞானி. தனக்கு அன்னியமாய் ஒன்றையும் காணாதவன் ஞானி. உன்னற்கு அரிய நிலை. உள்ளல் அற உள்ளத்தே விளங்கும் நிலை. உள்ளல் அற நிற்றலே சும்மா இருத்தல்.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2013

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 26 | சனி | காலை 9.41 | 27 | ஞாயிறு | காலை 10.59 |
| பிப்ரவரி | 24 | ஞாயிறு | பின் இரவு 2.52 | 19 | திங்கள் | பின் இரவு 3.05 |
| மார்ச் | 26 | செவ்வாய் | மாலை 4.45 | 27 | புதன் | மாலை 3.55 |
| ஏப்ரல் | 25 | வியாழன் | அதிகாலை 3.54 | 26 | வெள்ளி | அதிகாலை 2.55 |
| மே | 24 | வெள்ளி | பகல் 12.38 | 25 | சனி | காலை 10.37 |
| ஜூன் | 22 | சனி | இரவு 8.10 | 23 | ஞாயிறு | இரவு 10.37 |
| ஜூலை | 22 | திங்கள் | அதிகாலை 3.00 | 23 | செவ்வாய் | இரவு 12.35 |
| ஆகஸ்டு | 20 | செவ்வாய் | காலை 10.18 | 21 | புதன் | காலை 8.18 |
| செப்டம்பர் | 18 | புதன் | இரவு 7.20 | 19 | வியாழன் | இரவு 8.18 |
| அக்டோபர் | 18 | வெள்ளி | காலை 5.35 | 19 | சனி | காலை 5.09 |
| நவம்பர் | 16 | சனி | இரவு 8.30 | 17 | ஞாயிறு | இரவு 8.58 |
| டிசம்பர் | 16 | திங்கள் | பகல் 1.20 | 17 | செவ்வாய் | பகல் 2.59 |

# திருரமணக் குறள்

## தாயுமானவன்

*காப்பு*

*தாக்கஉளம் ஞாநி துறவுவாழ்க்கை ஆக்கஅருள்*
*★பாக்ய கணபதியார் காக்க*

*நூல்*

*1. முனிவர் ரமணர் மலைஅருணை யோடு*
*நனிஒன்றி வாழ்ந்ததுஅறி நன்கு.*

*2. அழகுசுந்த ரம்ஈன்ற அத்துவைத ஞானப்*
*பிழம்பின் அருளுண்டு பார்.*

*3. திருச்சுழியல் நள்ளிரவில் சோதிஒன்று உதிக்க*
*ஆருத்திரா திவ்யதினம் அன்று.*

*4. முப்பதாம் தேதி வருட இறுதி மாதம்*
*இப்புவியில் தோற்றம் இனிதே.*

*5. மழுங்கிய கண்ணால் முதியவள் ஒளிரும்*
*குழந்தையைக் கண்டாளே காண்.*

*6. வைத்தனர் பேர் ஒன்று வேங்கடராமன்*
*சைத்தன்யம் தோன்றித் திகழ.*

---

*(★ இதை ஆக்கியோனின் காலஞ்சென்ற தாய் பாக்யலட்சுமி, தந்தை கணபதி அய்யர்.)*

7. கட்டுடல் கால்பந்து குஸ்தி விளையாட்டு
விட்டிடலோ பற்று வயது?

8. பள்ளிப் படிப்பு பிடிக்காமல் போயினும்
தெள்கூர் நினைவாற்றல் தெரி.

9. பெரிய புராணகாதை பெம்மான் உவந்தார்
சிறிய வயதில் சிறந்து.

10. மதுரையில் வீட்டில் மரணமுற்று ஆய்ந்தார்
அதுஅழியா தானென் றறிந்து.

11. பாலன் பிராயம் பதினாறே ஞாலமுய்ய
காலனைத் தான் வென்றக் கால்.

12. ஒருவரால் அண்ணல் அறிந்த மலையே
கருத்தைக் கவர்ந்தது காண்.

13. வீற்று இருப்பின் இப்படி வேலையென் இங்கே?
பற்றறுத்த அண்ணன் சொல்.

14. வீடுபேறு தாமுணர்ந்து வீடுதுறந்தார் அக்கணமே
காடுமலை காத்திருக்கக் காண்.

15. ஐந்து ரூபாயில் மூன்று மட்டும் தாம்கொண்டார்
நைந்துருகி சேரமா மலை.

16. தகப்பனார் உத்தரவு: நாடிச் செல்கிறேன்
செகமாயை நீத்ததே காலை.

17. இதுநல்ல காரியத்தில் ஈடுபடப் போகிறது
இதைத் தேடி வாடாதீர் நீர்.

18. வரைந்து கடிதம்ஒன்று வைத்துநேர் சென்றார்
விரைந்துரயில் ஏறி மலைக்கு.

19. கையொப்பம் இல்லாக் கடிதமது தான்இறந்த
மெய்யப்பர் உள்ளம் உணர்.

20. ஒண்ணாம் நாள் செப்டம்பர் ஓடிவந்து ஒற்றினார்
அண்ணா மலையார் அகத்து.

தொடரும்

## தியானம்

கேள்வி: தியானம் செய்யும்போது எதைப்பற்றி நினைக்க வேண்டும்?

பகவான்: தியானம் என்றால் என்ன? நினைப்பு ஏதுமற்று இருத்தலே தியானம் எனப்படுவது. ஒன்றன்பின் ஒன்றாக உருண்டோடிவரும் எண்ணங்களே உமது மனத்தைக் கலக்குகின்றன. ஒரே ஒரு நினைப்பை மட்டும் விடாப்பிடியாய் எண்ணத்தில் இறுத்தி, அவ்வாறே ஒரே சிந்தனையுடன் தியானத்தில் ஈடுபட்டால் மற்ற நினைப்புக்கள் அகன்றுவிடும். இவ்வாறு தொடர்ந்து அப்பியசித்துவந்தால், தியானத்தில் நிலைத்து முழுதாய் ஆழ்வதற்கான மனவலிமை பெற்றுவிடலாம். சாதகனின் ஆன்மீக வளர்ச்சிக்குத் தக்கவாறு தியான முறைகளும் மாறுபடும். அகமுக தியானத்திற்கு அருகதையுள்ள ஒரு நபர் தியானத்தை நேரடியாக ஆன்ம விசாரணையில் செலுத்தலாம். நினைப்பவன் இவ்வாறு தன் மூலத்தை நாடினால் வேறு நினைப்புக்கள் எழா. நினைப்பே அற்ற நிஜ இருப்பைப்பற்றி இவ்வாறு அகமுகமாகச் சிந்திக்க முடியவில்லை என்கிறபோது, அத்தகையோன் கடவுளைக் குறித்துத் தியானம் மேற்கொள்ளலாம். இவ்வாறு தியானிப்பவர் நாளாவட்டத்தில் அந்தரங்க சுத்தி பெற்று, விரைவில் தமது நிஜ ஸ்வரூபத்தைப் பற்றிய எண்ண-விசாரத்தில் மனத்தை ஈடுபடுத்தி, பரிபூரணமாம் ஆன்ம தரிசனத்தில் ஆழும் நிலையை எய்திவிடுவார்.

# ரிபு கீதை

## தியாகராஜன்

*அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையின் 26வது அத்யாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால் அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்யாயத்தின் பாடல்களை, ஸ்ரீ பகவான் அவ்வப்போது அவை தொடர்பாய் அருளியுள்ள விளக்கங்ளோடு பக்தர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.*

*எதனிடையிற் பாகமுறுங் கருமமில்லை*
*யெதனிடையிற் பத்தியிலை ஞானமில்லை*
*யெதனிடையிற் பற்றிடும் பயனுமில்லை*
*யெதுவலது பரமபதந் தானு மில்லை*
*யெதனிடையிற் சாதனமே தொன்றுமில்லை*
*யெதனிடையிற் சாத்தியமோ ரணுவு மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய் (26/11)*

*எதனிடையி லாக்கைபொறி யுயிர்க ளில்லை*
*யெதனிடையின் மனதுமதி சித்த மில்லை*
*யெதனிடையி லகங்கார மவித்தை யில்லை*
*யெதனிடையி லவையினபி மானி யில்லை*

---

*(வச - 1 வசனாம்ருதம் பதிப்பு 2004, வச 2 - வசனாம்ருதம் பதிப்பு- 2000, ர.ம.பொ. ஸ்ரீ ரமணமஹரிஷியின் பொன்மொழிகள் - 2004, ஸ்ரீ ரமணாச்ரம வாழ்வும் நினைவும் 1999)*

*யெதனிடையிற் சமட்டியிலை வியட்டி யில்லை*
*யெதனிடையிற் சம்சார லேசமில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய் (26/12)*

*(வச.2/164)* கேள்வி - ஜீவ முயற்சியின்றி காரியங்கள் தாமே நடக்குமா? சாப்பாடு வேண்டுமெனில் அதைச் சமைத்தாக வேண்டும். சமைக்காது அது தானே வந்துவிடுமா?

ஸ்ரீ பகவான் - எல்லாக் காரியங்களும் முயற்சியாலேயே நடைபெறுகின்றன. ஆத்மா நிஷ்க்ரியம், அது அகந்தை வாயிலாகவே இயங்குகிறது. தூங்கி மயங்கும் குழந்தையைத் தாய் உண்பிக்கிறாள், சாப்பிடுவது தெரியாமலேயே அது சாப்பிட்டு விடுகிறது. இரவில் தான் சாப்பிட்டது குழந்தைக்குத் தெரியாது, தாயும் பிறரும் அதை அறிவர். அவ்வாறேதான் ஞானியின் விஷயமும். அவன் அதைச் செய்கின்றான், இதைச் செய்கின்றான் என்று பிறர் நினைக்கின்றனர். அவனோ எப்போதும் பரப்ரஹ்மானந்த லஹரியில் மூழ்கியிருப்பதால், துவைதப் பிரபஞ்சப் பிரஜ்ஞையே அற்று இருக்கிறான். ஈசன் ஸந்நிதி மாத்திரத்தால் உலகக்காரியங்கள் யாவும் நிகழ்கின்றன, ஆயினும் அவன் அவ்வியக்கங்களோடு சம்பந்தம் ஏதும் இன்றி இருக்கின்றான். அதனால் அவன் மஹாகர்த்தா எனப்படுகிறான். படைப்பிலுள்ளன யாவும், படைப்பவனாம் பிரஹ்மா உட்பட ஈசுவர நியதிப்படியே இயங்குவனவாம்.

*(வச.2/119)* கேள்வி- ஞானிக்குத் தேக உணர்வு இல்லையெனின், தேகத்தின் பாதைகள் சற்றும் அவனுக்குத் தெரிவதில்லையா?

ஸ்ரீ பகவான் - தெரிவதில்லை என்று சொல்ல வேண்டியதில்லை. தேகமே நான் எனக் கருதும் பாமரன் தேகத்தையும், அதன் பாதைகளையுமே உணர்கிறான். தனியான ஜீவவியக்தித்வமின்றி, எல்லாம் தானாகவே

*உணரும் ஞானிக்கு அவனது உடலும் அதன் அனுபவங்கள் அனைத்தும் பிரஹ்மாகாரமே ஆகும். இதுதான் அஞ்ஞானிகளுக்கும் ஞானிகளுக்கும் இடையேயுள்ள பேதம். அவ்வாறன்றி ஞானி கல்லைப்போல் அசையாமல் இருப்பான் என்று எண்ணுதல் அறியாமையே. எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே. அதனாலேயே ஞானியின் மனமே பிரஹ்மமென்று சொல்லப்படுகிறது. அது பிரஹ்மாகாரமே அன்றி வேறு எவ்வடிவும் அற்றது. அதுதான் ஸஹஜஸ்திதி எனப்படும், அதாவது உள்ளது உள்ளபடியிருத்தல்.*

*(ர.ம.பொன்-176-77- பக்தர்- அவ்வாறு கவனமாகப் பார்த்தால் (உண்முக நாட்டத்தால் நான் எழும் இடத்தை) நான் ஆன்ம ஞானம் பெற்று விடுவேன் என்று பகவான் தாங்கள் கூறுகிறீர்களா?*

*ஸ்ரீ பகவான் - ஆன்ம அறிவு பெறுதல் என்பதாக ஒன்றும் கிடையாது. நித்திய சத்தியமாகத் துலங்கி வருவதை ஒருவர் எவ்வாறு புதிதாகப் பெற முடியும், அல்லது எவ்வாறு மெய்மையைக் காண முடியும் எது உண்மை அற்றதோ அதை (அதாவது நான் எனும் அகந்தை மற்றும் அகந்தை எழுப்பிக்கும் புறத் தோற்றங்களை) உண்மை என்று கருதிவரும் அஞ்ஞானத்தை விலக்கிக் கொள்ள வேண்டும், அவ்வளவேதான். அவ்வாறு தெளிவுற்றால் நீங்கள் எப்போதும் இருந்து வரும் அதுவாகவே நிலைப்பீர்கள். பேருண்மை, பேருண்மையாகவே துலங்கும். உண்மையில்லாததை உண்மை (நிஜம்) என்று கருதும் மாயையை மக்கள் விலக்கிக் கொள்ள உதவும் பொருட்டே அனைத்து மதங்களும் அவை அறிவுறுத்தும் அனுஷ்டானங்களும் தோன்றியுள்ளன.*

*பக்தர் - பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மாவாகவே ஆகிவிடுகிறான் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றனவே?*

*ஸ்ரீ பகவான் - எதுவாகவும் ஆகிவிடும் விஷயம் அல்ல அது, அதுவாகவே (பிரும்மாவாகவே) இருப்பதே உண்மை. அடைவதற்கு என்று இலக்கு ஒன்றும் கிடையாது. எதையோ பெறுவதற்கும் ஏதுவில்லை. ஆன்மாவே நீங்கள், அதாவது ஆன்ம சொரூபமாகவே நீங்கள் எப்போதும் இருந்து வருகிறீர்கள். ஆன்மாவைப் பற்றிய உண்மையை உறுதிப்படுத்த, ஆன்மாவாகவே இருக்கிறோம் என்று உணர்வதைத் தவிர வேறொன்றும் சொல்லுவதற்கு இல்லை. கடவுளை அல்லது ஆன்மாவைக் காண்பது என்றால், ஆன்மாவாகவே இருப்பது, அதாவது, நீங்கள் உண்மையில் உள்ளபடி இருப்புக் கொள்வதே ஆகும். காண்பது என்றால் நிலைபேறு கொள்வது. ஆன்மாவாகவே இருக்கும் நீங்கள் ஆன்மாவை எட்டுவது எவ்வாறு? என்று அறிய விரும்புகிறீர்கள்! ரமணாச்ரமத்தில் இருந்து கொண்டே ரமணாஸ்ரமம் செல்வதற்கு எந்தெந்த வழிகள் உள்ளன? அவற்றுள் எது சிறந்த சுலப வழி என்று கேட்பதற்கு ஒப்பானதே இந்தக் கூற்று! நீங்கள் செய்ய வேண்டியது இதுவே; உடல் நானே என்கிற எண்ணத்தைக் கைவிடுக. புறப் பொருள்கள், தோற்றங்கள் பற்றிய எண்ணங்கள், அதாவது அநாத்ம விஷயங்கள் யாவற்றையும் தவிர்க்கவும். புறப் பொருட்களைப் பற்றிய எண்ணங்களில் மனம் வெளிமுகமாக மேயத் தொடங்கும் போதே அதை நிறுத்தி ஆன்மாவில் - அல்லது மெய்யான நான் என்கிற உள்ளுணர்வில் - பதிய வையுங்கள். நீங்கள் செய்ய வேண்டிய முயற்சி இம்மட்டுமே!*

*(வச.1/158)- ஸ்ரீ பகவான் - அறிவு, அறியாமை என்னும் பாகுபாடு தோன்றுவது மனத்தின் எல்லையிலேயே. யதார்த்த ஸ்வரூபமோ அவை இரண்டும் அற்றதோர் அறிவுமயம்.*

*(வச.2/7) - ஸ்ரீ பகவான் - உடம்பு என்பது ஓர் எண்ணமே. அவ்வெண்ணமும், பிற எண்ணங்கள் யாவும் நானெனும் ஒரே எண்ணத்தைப் பற்றியே எழுகின்றன.*

எண்ணங்கள் அனைத்திற்கும் அதுவே மூலம். அந்த மூலத்தை நாடினால், பிற எண்ணங்கள் யாவும் அகலும். அப்போது உடலோ, மனமோ, அகங்காரமோ ஒன்றுமே இராது. ஆத்மா ஒன்றே தானே தானாய்த் துலங்கும்.

(சூரி-117) - டாக்டர் அனந்த நாராயணராவ் சில நாட்களாக இரவில் வெகு நேரம் வரை பகவானுடைய கால்களுக்கு தைலம் தடவி தேய்த்து வந்ததால் அந்த நேரங்களில் பகவான் அருகில் இருக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. பகவான் கைக் கட்டியை இரண்டாவது முறை சஸ்திர சிகிச்சை செய்ததிலிருந்து எனக்கு (சூரி நாகம்மா) ஏதோ பயமாக இருந்தது, அவ்வப்பொழுது நான் அவரிடம் பகவானுக்கு ஆரோக்கியம் எப்படி இருக்கிறது என்று கேட்பேன்.

ஒருநாள் காலை வழக்கம்போல் நான் அவரை விசாரித்த பொழுது அவர், பரவாயில்லை குணமாகவே இருக்கிறது. ஆனால் அவருக்கு குணம் ஆகவேண்டும் என்கிற சங்கல்பம் வரவேண்டுமம்மா என்றார். பகவான் என்ன சொன்னார்? நீங்கள் ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? என்றேன். அவர், ஒன்றுமில்லை நேற்று வழக்கமாக எட்டு மணிக்குப் போய் நான் தைலம் தடவிக் கொண்டிருந்த போது பகவான் தாமாகவே சில வார்த்தைகள் சொன்னார், ஞானியானவன் தன் சரீர கர்மா எப்பொழுது தீரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். அது தீர்ந்து விட்டதென்று தெரிந்த உடனே உடலை விட்டுவிடுவான். தன் தலைமீது பெரிய பாரத்தைச் சுமந்து கொண்டு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போகிற கூலியாள், சேர வேண்டிய இடம் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்து அது வந்ததும் அந்த பாரத்தைக் கீழே போட்டு விடுகிறவன் போல் ஞானியும் இந்தச் சரீரத்தை விட்டு விடுகிறான். சாப்பிடுவதற்கு உட்காரும்பொழுது இலையைச் சுத்தம் செய்து பல வித பதார்த்தங்களைப் பரிமாறுகிறார்கள். அவற்றைச் சாப்பிட்ட பிறகு அந்த

இலையை எடுத்து வீசி எறிவது போலத்தான் ஞானியும் வந்த காரியம் முடிந்த பிறகு ஒரு கவலையும் இல்லாமல் தன் சரீரத்திலிருந்து விலகிச் செல்கிறான் என்று ஸ்ரீ பகவான் சொன்னதாக டாக்டர் சொன்னார்.

# இனிவரும் திருநாட்கள் – 2013


| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 14 | திங்கள் | பொங்கல் பண்டிகை |
| | 27 | ஞாயிறு | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 01 | | ரமண புராணம் அரங்கேற்ற நாள் |
| மார்ச் | 02 | சனி | சுந்தரம் ஐயர் நாள் |
| | 10 | ஞாயிறு | மகா சிவராத்திரி |
| | 15 | வெள்ளி | ஸ்ரீவித்யா ஹோமம் |
| | 21 | வியாழன் | ஸ்ரீ ராம நவமி |
| ஏப்ரல் | 11 | வியாழன் | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 14 | ஞாயிறு | தமிழ் வருடப் பிறப்பு |
| மே | 07 | செவ்வாய் | பகவானது 63வது ஆராதனை |
| ஜூன் | 02 | ஞாயிறு | மகா பூஜை |
| | 20 | வியாழன் | பசு லட்சுமி தினம் |
| ஜூலை | 22 | திங்கள் | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 01 | சனி | அருணை விஜய தினம் |
| அக்டோபர் | 05 | சனி | நவராத்திரி தொடக்கம் |
| | 13 | ஞாயிறு | சரஸ்வதி பூஜை |
| | 14 | திங்கள் | விஜயதசமி |
| நவம்பர் | 03 | ஞாயிறு | தீபாவளி |
| | 08 | வெள்ளி | கார்த்திகை தீப விழா தொடக்கம் |
| | 17 | ஞாயிறு | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 19 | வியாழன் | ஸ்ரீ பகவானது 134-ஆவது ஜயந்தி |

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி கூறும் தியானம்

ஒரு அணைக்கட்டில் தண்ணீர் வெளியில் பாயாமல் இருப்பதற்கு தடுப்பு வைத்திருப்பார்கள். அதில் சிறிது துவாரம் இருந்தால்கூட தண்ணீர் வெளியில் பாய்ந்துவிடும். ஒரு தோட்டக்காரன், வேண்டாத செடிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கி, களை எடுப்பதுபோல, ஒவ்வொரு எண்ணமாகக் கவனத்துடன் களையவேண்டும். விசாரத்தின் மூலம்தான் வேரோடு எடுக்க வேண்டும் என பகவான் கூறுகிறார்.

ஔவையார் என்ற தமிழ் ஞான மூதாட்டி, கடலை அளக்கலாம், மணலைக் கயிறாகத் திரிக்கலாம். மத யானையையும் அடக்கலாம். ஆனால் மனதை அடக்க முடியாது என்றார். ஆனால் ரமண பகவான் அது மெத்த சுலபம் என்கிறார். மற்ற யுகங்களைவிட இப்பொழுது மிகவும் எளிது என்கிறார். ஆனால் அஞ்ஞானிகளான நமக்கு அது சுலபமா? முயற்சிப்போம்.

பகவான் கூறிய உதாரணங்கள் சில. ஒரு பசுவிற்குக் கொட்டகையிலேயே புல் கிடைத்து விட்டால் வெளியில் மேய்வதற்குச் செல்ல அவசியம் இல்லை. ஒரு பெண் கழுத்தில் நகை இருப்பதை அறியாமல் வெளியில் தேடிக் கொண்டிருந்தாள். மற்றவர் அதைச் சுட்டிக்காட்டிய பிறகுதான் தன் தவற்றை உணர்ந்தாள். பத்து மூட மனிதர்கள், ஒவ்வொருவரும் தன்னை விட்டு, மற்ற ஒன்பது மனிதர்களை மட்டும் எண்ணி, ஒருவர் குறைவதாக வருத்தமுற்றார்கள். வெளி மனிதர் ஒருவர் வந்து அவர்கள் தவற்றைச் சுட்டிக் காட்டியதும் உண்மையை அறிந்தார்கள்.



தியானத்தைப் பற்றிக் கற்பிப்பதற்கோ, கற்றுக் கொள்வதற்கோ ஒரு முயற்சியும் அவசியமில்லை. தியானம் என்ன என்று மனதில் புரிந்து விட்டால் போதும். எப்பொழுதும் நிகழ்காலத்தில் இருப்பதுதான் தியானம். நாம் இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் நினைப்பதால் நிகழ்காலத்தை இழந்து விடுகிறோம். சில நிமிடங்களோ, சில மணிகளோ, கண்களை மூடி அமர்ந்திருப்பது ஒரு சிறு முயற்சிதான். நாம் அதிலேயே மூழ்க வேண்டும். கண்களைத் திறந்து கொண்டு தியானம் செய்ய முயற்சிக்க வேண்டும். கண்களை மூடியே பழகினால் கண்களைத் திறந்ததும் மனம் கலைந்து விடும்.

சுவாரஸ்யமாக ஒரு நாவலைப் படித்துக் கொண்டிருந்தாலோ, ஒரு சினிமாவைப் பார்த்துக் கொண்டிருந்தாலோ, வெளியில் நமது கவனம் செல்வதில்லை. ஆனால் தியானமோ, பூஜையோ, செய்வதற்கு அமர்ந்தால் மனது உடனே வெளியில் ஓடுகிறது. சினிமாவைப் பார்ப்பதுபோல் அதிக நேரம் நம்மால் உட்கார முடிவதில்லை. ஏனென்றால் நமக்கு அதில் அதிக ஈடுபாடு இல்லை.

நாம், நமது உடல் இல்லை என எண்ணி, வெளியில் இருந்து நம்மை நமது செய்கைகளைக் கவனிக்க வேண்டும். நம்மில் நாம் குறை காண்பது இல்லை. நம் சரீரத்தை விட்டு வெளியில் நின்று நம்மைப் பார்த்தால் நமது தவறுகள் தெரியும்.

நாம் நமது உடலை அழகுபடுத்த முழு முயற்சி எடுக்கிறோம். நமது உடைகள் நமக்கு ஒரு பொருத்தமாக இருக்கிறதா, மற்றவர்களும் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள். உச்சி முதல் உள்ளங்கால்வரை அனைத்தும் பொருந்துகிறதா என்ற சிந்தனையிலேயே இருக்கிறோம். ஆனால் நம்முள் 24 மணி நேரமும் ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும் நமது எண்ணங்களைக் கவனித்தோமோ? நாம் பார்த்தால் அது நின்றுவிடும். திருடன் தன்னைக் கவனிக்கிறார்கள் என அறிந்தால் பயந்து ஓடி விடும்.

ஒரு இளம்தாய் பிறந்த குழந்தையை எவ்வாறு கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறாளோ அதுபோல், எண்ணத்தைக் கவனி. ஒரு கருமி பணத்தைப் பூட்டி வைத்துவிட்டு, சிந்தனை முழுதும் அதிலேயே வைத்திருப்பதுபோல் இரு. தலையில் தண்ணீர் குடம் வைத்திருக்கும் பெண்ணின் கவனம் அதுமேலேயே இருப்பதுபோல, குட்டி போட்ட பூனை அந்த இடத்தையே சுற்றிச் சுற்றி வரும் என்பார்கள். அதுபோல சிந்தனையை ஒரே இடத்தில் செலுத்து அல்லது நிறுத்து.

ஒருநாள் முழுதும் ஒரு பிரபலமான மனிதனைப் பேட்டி காண்பது போல, உன் எண்ணத்திலேயே ஒருநாள் முழுவதும் மூழ்கி இரு. உனது குழப்பங்கள் தீர்ந்து மனநிம்மதி கிடைக்கும்.

அன்பே தெய்வம். அனைவரிடமும் அன்பு செலுத்து. புத்தபகவான் முதல் ரமண பகவான், காந்திவரை அன்புதான் பிரதானம் என்கிறார்கள். அன்பு என்பது ஒரு பைத்தியக்காரக் கணக்கு. நீ வகுத்தால் அது பெருக்கி விடும்.

அடுத்து ஆணவம் (Ego). ஒரு யாசகம் செய்பவனாக இருந்தாலும் அவனுக்கு மற்றவர்களை விட ஒரு கவளம் சாதம் அதிகம் கிடைத்தால் உடனே அகங்காரம் வந்து விடுகிறது. நம்மை யாராவது புகழ்ந்தால் அகங்காரம் அங்கு வந்து நிற்கும். அது நாகத்தை விடக் கொடியது. சிறிது

அகங்காரம் இருந்தால்கூட கடவுள் சந்நிதியை அடைய முடியாது. ஆங்கிலத்தில் அகங்காரம் என்றால் கடவுளை வெளியே தள்ளுவது என அறியலாம் (Edging God Out).

பகவான் ரமணர் நமக்கு நேரான, சுலபமான பாதையைக் காட்டி அருளியிருக்கிறார். அவர் நமது கரத்தைப் பிடித்து நம்முடன் நடக்கிறார். நாம் அவரை நழுவவிடாமல் கவனமாக இருக்க வேண்டும். குட்டிக் குரங்குகள் தம் தாயைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டிருக்கும். பெண் குரங்கு மரத்தில் தாவும்பொழுது குட்டி விழ வாய்ப்புள்ளது. பூனை தன் குட்டியை வாயால் கௌவிக் கொண்டிருக்கும். அது விழ முடியாது. அதுபோல பகவான் நம்மைப் பாதுகாக்கிறார்.

காபி அருந்தினால் அது மெதுவாக உள்ளே செல்வதைக் கூர்ந்து கவனி. அடுத்து ஒரு செய்தித்தாளைப் படிக்க ஆரம்பித்தால் செய்தியை மற்ற சிந்தனை இல்லாமல் படி. ஒரு சினிமா விளம்பரத்தைப் படித்தால், மனது அநத் நடிகர் நடித்த பழைய படத்திலும், நடிக்கப்போகும் புது படத்தைப் பற்றியும் சிந்தனையைக் கிளப்பும். அதற்கு இடம் கொடாதே. செய்தியைப் படி. அத்துடன் நிறுத்து.

ஒவ்வொரு முறை எது சாப்பிட்டாலும் அதைக் கடவுளுக்கு அர்ப்பணித்துச் சாப்பிடு. சாப்பிடும்போது ஆகாரம் உள்ளே செல்வதை முழு கவனத்துடன் கோக்கவும். புத்த பிட்சுக்கள் சாப்பிடும்போது அதை தியானம் என்றும் நடக்கும்பொழுது அதை தியானம் என்றும் கூறுவார்கள்.

இரவு உறங்கச் செல்லும்பொழுது, அன்று நடந்த நிகழ்ச்சிகளை மனதில் கொண்டு வராதே. வீட்டின் வெளியிலேயே அதை விட்டு விடு. அடுத்த நாள் பற்றிய கவலை அடுத்த நாளே பார்த்துக் கொள்ளும். மனதில் நினைவுகள் இல்லாமல் அமைதியோடு இரு. அல்லது கடவுள் நினைவோடு இரு. தூக்கம் வரவில்லையானால்

புரண்டு புரண்டு படுக்காதே. அசைவற்று, கவலையற்று ஜெபமோ, விசாரமோ செய்.

பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு சர்க்கஸுக்குச் சென்றிருந்தார். அக்காட்சியைக் கண்டு, இதைச் செய்வதற்கு அவர்கள் எவ்வளவு பிரயத்தனம் எடுத்திருப்பார்கள். இதே முயற்சியை அவர்கள் கடவுளை அடைவதற்கு முயன்றால், சுலபமாகக் கடவுளைக் காணலாம் என்றார்.

வடலூர் இராமலிங்க அடிகளார் என்ற தவஞானி, பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்றார். அரை வயிற்றுக்கு உணவு உட்கொண்டு, தனிமையில் இரு. அதிகம் தூங்காமல் விழித்திரு. ஆனால் அதன் உட்கருத்து. ஞானப்பசி, தெய்வீகப் பசியோடு இரு. எந்தச் சூழ்நிலையிலும் மனத்தளவில் தனிமையாக இரு. விழித்திரு என்றால் அறிவு தெளிந்து முழு உணர்வோடு கடவுளை நினை.

பகவான் தியானத்தில் அமைதி கிட்டாவிட்டால் அருணாசலத்தைச் சுற்றி வலம் வா. அவர் அருள்வார். முழு கர்ப்பிணியான ஒரு இராஜகுமாரி எவ்வாறு கவனத்துடன் நடப்பாளோ, அதுபோல் பேசாமல் மன அமைதியோடு வலம் வர வேண்டும் என்றார்.

நம்பிக்கை மலையையும் அசைக்கும். பலவித முயற்சிக்குப் பின் இமயமலையின் அடிவாரத்திற்கு வந்து விட்டோம். ஓர் எறும்பு வளர்ந்து எவ்வாறு மலை ஏறுமோ, அதுபோல் நாம் செல்ல வேண்டும். நமது சக்தி அவ்வளவுதான். நாம் பகவானைச் சரணடைவோம். அவர்தான் நம்மை மலை உச்சிக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். ரமண பகவான் பாதமே சரணம்.

# பஜ கோவிந்தம்

## டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த்

*ஆசார்யர் ஆதிசங்கரர் தம்முடைய சிஷ்யர்களுடன் காசியின் பிரதான வீதியொன்றில் போய்க் கொண்டிருந்தார். பண்டிதர் ஒருவர் தன்னுடைய வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து இலக்கணம் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். டுக்ருங் கரணே என்ற மிகக் கடினமான இலக்கண விதியைக் கற்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த பண்டிதரைப் பார்த்த ஆசார்யர் நகைத்தார். சினங்கொண்ட பண்டிதரோ நகைப்பிற்கான காரணத்தை வினவ, ஆசார்யரிடமிருந்து பக்தியும் ஞானமும் ஒன்றிணைந்த ஸ்லோகங்கள் பிரவாகமாகப் பெருக்கெடுத்தன.*

*பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே*
*ஸம்ப்ராப்தே ஸன்னிஹிதே காலே நஹி நஹி ரக்ஷதி*
*டுக்ருங் கரணே*

*கோவிந்தனை வழிபடுவதை விட்டு டுக்ருன் என்ற இலக்கணத்தைப் பயின்று கொண்டிருக்கும் விவேகமற்றவனே (மூடன்), வாழ்க்கையின் முடிவில் காலன் வந்து அழைக்கும்போது இந்த இலக்கணம் உன்னைக் காப்பாற்றாது; இறைவனின் நாமமே உன்னைக் கரைசேர்க்க வல்லது என்றுரைக்கிறார் ஆசார்யர். காலன் எப்பொழுது வருவான் என்று தெரியாத நிலையில், இறைவனை வழிபட வேண்டியதன் அவசரத்தை உணர்த்துவதன் பொருட்டு பஜ கோவிந்தம் என்ற பதத்தை ஆசார்யர் மூன்று முறை பயன்படுத்துகிறார்.*

*தஸ்மை ஸ்ரீ குரவே நம:*



கோவிந்த என்ற நாமத்தைப் பயன்படுத்தியதில் மற்றுமொரு தாத்பர்யத்தைக் காணலாம். ஆசார்யரின் குருவாக விளங்கியவர் கோவிந்த பகவத் பாதர். தம்முடைய குருவிற்கு வந்தனம் தெரிவிக்கும் பொருட்டு, பஜ கோவிந்த ஸ்லோகங்களை குருவின் நாமத்தை வைத்தே தொடங்குகிறார். இறைவனைப் பாடுவதோடு அவரவர் தம்முடைய குருவையும் நினைவில் கொண்டு வழிபட வேண்டும் என்பதுதான் இதன் உட்கருத்து.

ஒவ்வொரு மரபிற்கும் வேராக நிற்பது அதன் குரு பரம்பரை ஆசார்யரை குருவாகக் கொண்ட அத்வைத மரபுக்கான குரு பரம்பரையின் பிரதான குருவாக மஹாவிஷ்ணுவே விளங்குகிறார்.

*நாராயணம் பத்மபுவம் வஸிஷ்டம்*
*சக்திம் ச தத் புத்ரம் பராசரம் ச!*
*வ்யாஸம் சுகம் கௌடபதம் மஹாந்தம்*
*கோவிந்த யோகீந்த்ரம் அதாஸ்ய சிஷ்யம்!!*
*ஸ்ரீ சங்கராசார்யம் அதாஸ்ய பத்ம*
*பாதம் ச ஹஸ்தாமலகம் ச சிஷ்யம்!*
*தம் தோடகம் வார்த்திக்காரம் அன்யான்*
*அஸ்மத் குரூன் ஸந்த்தம் ஆனதோஸ்மி*

ஸ்ரீமன் நாராயணனைத் தொடர்ந்து பத்மபுவன் (தாமரையில் தோன்றியவர்) என்றழைக்கப்படுகிற பிரம்மா, பிரம்மாவின் மானசிகப் புத்திரரான வஸிஷ்டர் என்ற வரிசையில் வரும் குருபரம்பரை, சக்தி, பராசரர், வியாஸர், சுகர் என்று புத்திர வழியில் தொடர்கிறது. வியாஸர்-சுகர் வரையில் தந்தை-மகன், குரு-சீடர் என்று இரண்டு வழிகளாகவும் தொடர்ந்து, சுகருக்குப் பின்னர் புத்திர வழியில்லாமல், சீடர் மரபாக மட்டும் வருகிறது. சுக பிரம்மத்தின் சிஷ்யராக இருந்த கௌடபாதரைத் தொடர்ந்து கோவிந்த பகவத் பாதரும் அவருடைய சிஷ்யரான ஆசார்யர் ஆதிசங்கரரும் இந்த குருபரம்பரையை வாழையடி வாழையாக வளர்த்த மஹான்கள் ஆவர். இப்போது எதற்காக இந்த குரு பரம்பரையைப் பற்றிய தகவல்? இந்த குரு பாரம்பரியத்துடன் தொடர்புடைய மற்றொரு நிகழ்ச்சியைச் சிந்தித்தல், பஜ கோவிந்தத்தை முழுமையாக உணர்வதற்கு உதவும்.

பாற்கடலில் மஹாவிஷ்ணுவைத் தாங்கும் ஆதிசேஷனின் அவதாரமாகத் தோன்றியவர் பதஞ்சலி முனி. ஆதிசேஷன் தங்கட்கு மகனாகப் பிறக்க வேண்டுமென்று நெடுங்காலமாகத் தவமிருந்த அத்ரி முனிவருக்கும் அவர்தம் பத்தினி அநசூயாவுக்கும் பிறந்த குழந்தைதான் பதஞ்சலி முனி. குட்டிப் பாம்பாக அநசூயா கையில் சேஷன் அவதரிக்க கையை உதறிய அவள் பாதத்தில் அது அஞ்சலி செய்து சரண் புக பாம்பார் பதஞ்சலி ஆனார்.

யோக சூத்திரத்தை உலகுக்கு அருளிய பதஞ்சலி முனி, தாம் இயற்றிய வியாகரண சூத்திரத்தை (வியாகரண சாஸ்த்திரத்தின் மஹாபாஷ்யம்) தம்முடைய சீடர்களுக்குத் தாமே உபதேசிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார். அருவமாக இருந்து உபதேசங்களை அளிக்கத் தொடங்கினார். உபதேசத்தைத் தொடர்ந்து சீடர்களிட மிருந்து சந்தேகங்கள் எழுந்தன. எல்லோருடைய சந்தேகங்களையும் தீர்க்கக் கால அவகாசமின்றிப் போய்விடக் கூடாது என்பதற்காகத் தம்மை ஆயிரம்

*தலை நாகமாக (பூர்வாஸ்ரமம் அதுதானே) மாற்றிக் கொண்டார். ஒவ்வொரு சீடனுக்கும் ஒவ்வொரு வாயினால் பதிலளிக்க ஆரம்பித்தார். பாம்பான தம்முடைய மூச்சுக் காற்று பட்டால் சீடர்கள் மாண்டு விடுவார்கள் என்பதால் தமக்கும் தம் சீடர்களுக்கும் நடுவில் ஒரு கனமான திரையை அமைத்தார். திரையை அகற்றக் கூடாது (பாம்பு வடிவில் தாம் இருப்பதை யாரும் காணக் கூடாது என்பதற்காக); வகுப்பை விட்டு எங்கும் செல்லக் கூடாது; என்ற இரு கட்டளைகளை தம்முடைய சிஷ்யர்களுக்குப் பிறப்பித்தார்.*

*ஒரு காரியத்தைச் செய்யாதே என்றால் அதைச் செய்து பார்க்க வேண்டும் என்ற பேரவா மனத்தில் எழும். இது சாதாரண மனித இயல்பு. அவ்வாறான எண்ணம் சிஷ்யர்களின் மனத்தில் எழ ஒரு சிஷ்யர் மட்டும் குருவின் அனுமதியின்றி வேறு அலுவலுக்காக வகுப்பைவிட்டுச் சென்றிருந்த அந்தத் தருணத்தில் (இன்னொரு மாணவரின் ஆர்வக் கோளாறு காரணமாகத்) திரை அகன்றது. ஆயிரம் வாயினின்று வந்த விஷத்தில் அங்கிருந்த அனைத்து சிஷ்யர்களும் எரிந்து சாம்பலாயினர்.*

*தாம் நடக்கக்கூடாது என்று நினைத்த விஷயம் நடந்துவிட்ட துன்பத்தில் இருந்த பதஞ்சலி முனி, வெளியே சென்ற சிஷ்யன் உள் நுழைவதைப் பார்த்து, ஒரு சிஷ்யனாவது தப்பிவிட்டானே என்று ஆனந்தப் பட்டார். அந்த சந்தோஷத்தில் எஞ்சிய சிஷ்யனுக்கு அனைத்தையும் உபதேசித்தார். இருப்பினும் குருவின் ஆணையை மீறிய சீடன் தண்டனை அடைந்தே தீர வேண்டும் என்பதன்பொருட்டு அந்தச் சீடன் பிரம்ம ராக்ஷஸாகும்படி சபித்தார். என்றைக்குத் தகுதியான ஒரு மாணவன் வருகிறானோ அன்று தான் கற்றதையெல்லாம் அவனுக்குப் போதித்து, தன்னுடைய மனித உருவத்தைத் திரும்பப் பெறலாம் என்று கூறிச் சென்றார் பதஞ்சலி முனி. அந்தச் சீடர்தான் ஆதிசங்கரரின் குருவான கோவிந்த பகவத்பாதருக்கும் குருவாக இருந்த கௌடபாதர்.*

பதஞ்சலியிடம் போதனைகளைக் கற்றுக் கொண்ட கௌடபாதர், நர்மதை நதி தீரத்தில் அமைந்திருந்த ஆலமரம் ஒன்றின் மீதமர்ந்து சரியான மாணவனைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடலானார். தாம் கேட்கும் கேள்விக்குச் சரியான விடையளிப்பவரே தமக்குச் சீடராகத் தகுதியுள்ளவர் என்ற நோக்கத்தோடு, அந்தப் பாதையில் போகும் அனைவரிடத்திலும் பிரம்மராக்ஷஸ் வடிவிலிருந்த கௌடபாதர் கேள்வி கேட்பார். நீண்ட நாளாயினும் யாரும் சரியான விடையளிக்கவில்லை. இதனால் மிகுந்த மனச் சோர்வடைந்தார்.

ஒருநாள் அந்த வழியில் சந்திர சர்மா என்ற இளைஞன், பதஞ்சலி முனிவரிடம் வியாகரண சாஸ்திரத்தைப் பயில சிதம்பரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். தம்முடைய வழக்கமான கேள்வியை கௌடபாதர் அந்த இளைஞனிடம் கேட்க, அவன் அதற்குச் சரியான விடையளித்தான். அவன்தான் தம்முடைய சீடன் என்று முடிவெடுத்தார். அவன் சிதம்பரம் செல்லும் நோக்கத்தையும் அறிந்தார். இறைவனின் திருவருளால் தாம், தம்முடைய உண்மை வடிவை அடையும் நாள் நெருங்கிவிட்டது என்ற சந்தோஷம் மனத்தில் மேலோங்க, பதஞ்சலி முனி சிதம்பரத்தில் இல்லாத விஷயத்தை எடுத்துரைத்து, அந்த இளைஞனுக்குத் தாம் கற்ற அனைத்தையும் போதிக்க ஆரம்பித்தார்.

உணவு உறக்கமின்றி பதினான்கு வருடம் அந்த இளைஞன் பாடம் கற்றான். தான் கற்றதெல்லாம் பின்னர் வரும் சந்ததியருக்குப் பயனாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளாடு அனைத்தையும் ஆலமர இலைகளில் பொறித்தான். போதனை முடிந்த நிலையில் கௌடபாதர் தம்முடைய மானுட வடிவைத் திரும்ப பெற்றார். சுகப் பிரம்மத்தைத் தொடர்ந்து குரு சிஷ்ய பரம்பரையைக் கட்டிக் காத்தவர் என்னும் பேறு பெற்றார். தம்முடைய

சிஷ்யனுக்கு விடைகொடுத்து அனுப்பினார்.

தான் எழுதிய பாஷ்ய ஆல இலைகளை மூட்டையாகக் கட்டிக் கொண்ட இளைஞன் பயணத்தைத் தொடங்கினான். உணவில்லாமல்கூட இருந்து விடலாம். ஆனால் உறக்கமில்லாமல் இருப்பது மிகக் கடினம். பதினான்கு வருடம் படிப்பிற்காக உணவையும் உறக்கத்தையும் துறந்த அவனைத் தூக்கம் ஆட்கொண்டது; கண்கள் சுழன்றன. வழியிலிருந்த மரத்தடியில், ஆல இலை மூட்டையை வைத்துவிட்டு அந்த இளைஞன் உறங்கிப் போனான்.

தன்னுடைய பசிக்காக உணவு தேடி அந்தப் பக்கமாக வந்த ஆடு ஒன்று, இலை மூட்டையைக் கண்டது. மூட்டையிலிருந்த இலைகளை உண்ணத் தொடங்கியது. எதையும் உணராத இளைஞனோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். பசியைத் தீர்த்துக் கொண்ட ஆடு, அந்த இடத்தை விட்டுச் சென்றது.

நீண்ட நேரம் கழித்து எழுந்த இளைஞன் அங்கு நடந்ததை மெல்ல மெல்ல உணர்ந்தான். தன்னுடைய பதினான்கு வருட உழைப்பு வீணானதைக் கண்டு சிறிது நேரம் கலங்கினான். இறைவனருளால் க்ஷண நேரத்தில் உண்மை உள்ளத்தில் ஒளிர்ந்தது. இறைவனை விட்டு இலக்கணத்தைப் பயில தன்னுடைய வாழ்நாளை இறைவனை அடையும் முயற்சியில் கழிக்க முடிவெடுத்த சிஷ்யன்தான் பிற்காலத்தில் கோவிந்த பகவத் பாதராகத் திகழ்ந்து, ஆசார்யர் ஆதிசங்கரருக்குக் குருவானார். தம்முடைய அனுபவங்கள் அளித்த தெளிவு, தாம் செய்த தவத்தினால் பெற்ற ஞானம், இறையனுபவம் இவையனைத்தையும் தம்முடைய சிஷ்யரான சங்கரருக்கு உபதேசித்தார்.

தொடரும்

# நான் யார் தெரியுமா?விலிருந்து நான் யார் வரை

*பகுதி 16*

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

*பரம்பொருள் என்பது நம்மால் எட்டப்பட முடியாத ஒரு கடினமான தத்துவம் என்ற எண்ணம் இன்று பரவலாகக் காணப்படுகிறது. உண்மையில் பார்த்தால் இந்திய தத்துவ, சமய நூல்களில் இறை உணர்வு என்பது தினசரி வாழ்வின் ஒரு அம்சமாகவே அமைந்து உள்ளது. இறைவனை நெருங்கிய பாசமுள்ள ஒரு உறவினனாகவே அவை நமக்குக் காட்டுகின்றன. ருக் வேதம் இதை அழகாகச் சொல்லும்:*

*அக்னிம் மன்யே பிதரம்*
*அக்னிம் ஆபிம், அக்னிம் ப்ராதரம்*
*சதமித் சகாயம் (ருக் 7.3)*

*அவனே தந்தை, உறவினன், நண்பன் என்று கருதும் பாங்கு பல இடங்களில் காணக் கிடைக்கிறது.*

*இக்கருத்தையே ஆதிசங்கரரும் எளிய வார்த்தைகளில் சொல்லுவார்:*

*மாதா ச பார்வதி தேவி பிதா தேவோ மகேஸ்வர:*
*பாந்தவாஃ சிவ பக்தாஸ்ச ஸ்வதேசோ புவனத்ரயம்*



பொருள்: பார்வதி தேவியே என் தாய்; சிவபெருமான் என் தந்தை; எல்லாச் சிவ பக்தர்களும் என் உற்றார் . இவ்வுலகம் மூன்றும் என்னுடைய நாடு

இந்த உணர்வு புராண இதிகாசங்களிலும் பின்னர் வந்த பக்தி இலக்கியங்களிலும் அதிகமாகப் பேசப்படுவதைக் காணலாம். இந்த உணர்வுக்கு ஆண்டாளின் வாழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

ஆண்டாள்:

ஸ்ரீவில்லிபுத்தூரில், அந்தண திலகமான செல்லப் பெண்ணாக வளர்கிறாள் கோதை. தந்தையின் இல்லமும் அவர் வளர்த்த தோட்டமும், அங்குள்ள ரங்க மன்னார் உறை ஆலயமுமே அவள் அறிந்த உலகம். அவள் வீட்டிற்கு வந்த சான்றோர் சிலர் மூலமாக கண்ணனின் பெருமையை உணர்கிறாள் அப்பேதை. கண்ணனின் பெருமையை உணர்கிறாள் அப்பேதை. ஆயப்பாடிச் செல்வனின் கல்யாண குணங்களில் ஈடுபட்ட அச்சிறுமிக்கு உலகமே பிருந்தாவனமாகிறது. தன் மனத்திண்மையால் ஸ்ரீவில்லிபுத்தூர் வாழ் நங்கை ஆய்பாடியின் இடைக்குலத்துப் பெண்ணாகிறாள். இடை நடையும், குடை முடியும், இடைப் பேச்சும் கொண்டவளாக மட்டும் அவள் மாறவில்லை. முடைநாற்றமும் வந்து சேருகிறதாம்! அவள் திருப்பாவையில் தன்னை முழுவதும் இடைப்பாடி சிறுமியாகவே பாவித்து ஈடுபடும் தன்மை வெளிப்படுகிறது. சில சொற்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். ‘கீழ்வானம் வெள்ளென்று எருமைச் சிறுவீடு’ என்ற வரியில் ‘சிறுவீடு’ என்ற பிரயோகமும்,

*'முடநெய் பெய்து முழங்கை வழிவார' என்ற அனுபவமும் 'ஊக்கமும் தட்டொளியும் கொண்டு' என்பதில் காணப்படும் எளிமை சார்ந்த உரிமையும் அவனை அந்தண வாழ்விலிருந்து பக்தி என்னும் விமானத்தில் ஏற்றி ஆய்பாடி வாழ் 'இடக்கை வலக்கை அறியாத' சிறுமியாக ஆக்கி விடுகிறது. இதுவே இறைவனை எளிமைப்படுத்தி, எம்முள் ஒருவனாக ஆக்கும் எளிய சித்தாந்தம்.*

*இந்த மார்க்கம் சுலபமானது. சம்சாரிகளுக்கு ஏற்ற மார்க்கம். பரம்பொருளை 'சிக்கெனப் பிடிக்க' சீரிய உபாயம்.*

*தேவாரம்:*

*படிப்படியாக ஒரு ஜீவாத்மா எப்படி இறைவன் வசமாகிறான் என்பதை கீழ்க்கண்ட தேவாரப்பாடல் விளக்குகிறது.*

*முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள் பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள் அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.*

*நாயகி முதலில் அவன் நாமத்தைக் கேட்கிறாள்; பின் அவன் ரூபத்தை அறிகிறாள். அவன் வாழும் ஊரை உணர்கிறாள். அவனுடைய நாம-ரூப-குணங்களால் கவரப்பட்டு அவன்பால் ஈடுபடுகிறாள். பிச்சியாகிறாள். தன் உறவுகளையெல்லாம் துறந்து, தன் நினைவை நீத்து அவனிடம் தலைப்படுகிறாள். பிரம்ம சாக்ஷாத்காரம் என்ற நிலையைப் பக்தி மார்க்கத்தில் அப்பர் சுவாமிகள் திருவாரூர் உறையும் ஈசனின் வயப்பட்ட ஒரு நங்கையின் உணர்வு மூலமாக நமக்குக் காட்டுகிறார். சாலோக்ய-சாமீப்ய-சாரூப-சாயுஜ்ய நிலைகளை அழகிய நாயகி-*

*நாயக பாவத்தில் எடுத்துக் காட்டும் இந்தப் பாடல் பக்தி பாவத்தின் உன்னத எடுத்துக்காட்டு.*

*இவ்வாறு 'தந்நிலை இழத்தலே' இறைவனின் திருவடியை அடைய உயர்ந்த வழி. இதற்கு 'நான்' என்ற எண்ணம் அழிய வேண்டும். அது எளிதில் கைகூடுவதில்லை. உலகைத் துறந்து 'நாராயணனே பரம்பொருள்' என்ற பக்தியில் திளைத்து, அவனுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்வதையே பெரும் பேறாகக் கொண்டவர் விப்ரநாராயணர். அவரையும் தேவதேவி என்ற பெண் மோகத்தால் தன்பால் இழுத்துக் கொள்கிறாள். இறை நாமத்தையும் பேரின்பத்தையும் இழந்த அந்த பக்தர், தேக சுகத்தையும் சிற்றின்பத்தையும் நாடி அவள் வசப்படுகிறார். பின்னர் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டு தொண்டரடிப்பொடி ஆழ்வார் என்ற திருநாமத்தைப் பெற்று திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற சிறந்த இரண்டு கிரந்தங்களைப் படைக்கிறார். திருவரங்க நாதனைத் தவிர வேறு எந்தத் திவ்ய தேசத்தையும் பாடாத இந்த எளிய பக்தர், "இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்று பிரம்ம லோகத்தையும் புறக்கணிக்கின்றார்.*

*இந்த ஆழ்வார் மூலம் நமக்கு ஒரு பெரிய எச்சரிக்கை செய்கிறான் இறைவன். இறைவனிடத்தே லயித்த மனம் வேறு சில லௌகீக கவர்ச்சிகளால் ஈர்க்கப்பட்டு விடும். இந்த 'நான்' என்ற நிலை முழுவதும் நாசமடைந்தாலே பேரின்பப் பேற்றை முழுமையாகப் பெறலாம்.*

*உபதேசவுந்தியாரில் ஒரு பாடல் மிகத் தெளிவாக இதை உணர்த்துகிறது.*

*"இலயமு நாச மிரண்டா மொடுக்கம்*
*இலயித்து உளதுஎழும் உந்தீபற*
*எழாதுஉரு மாய்ந்ததேல் உந்தீபற"*

எத்தனை படித்தாலும் கேட்டாலும் இந்த மனக் குரங்கு திடீரென்று ஆசாபாசங்களை நோக்கிப் பாய்ந்துவிடும். அதனால்தான், "இலயத்தில் உளது எழும்" என்று கூறப்பட்டது. இந்த உருவம் அழிந்தால்தான் சித்தி கிடைக்கும் என்பது தெளிவு. இதையே ரத்ன சுருக்கமாக "உருமாய்ந்ததேல் எழாது" என்று விளக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட அப்பரின் நாயகி இந்த ஏணிப்படிகளில் எப்படிச் செல்கிறாள்? அவன் நாமத்தில் கட்டுண்டு பிச்சியாகிறாள். அன்னையையும் அத்தனையையும் நீத்து பற்றுகளை ஒழிக்கிறாள். தன் ஆசாரத்தையும் உலகியல் வாழ்வையும் நீக்குகிறாள். தன்னை மறக்கிறாள். தன் 'உருமாய்ந்து' ஈசனிடம் ஐக்கியமாகிறாள். ரமணரின் தத்துவத்திற்கு இந்த தேவாரப் பெண் பக்தி வடிவம் அமைத்துத் தருகிறாள்.

இந்த மனக்குரங்கு என்னும் கட்ட முடியாத சக்தியை அடக்குவதே மனித வாழ்வின் தத்துவம். இது இறைநிலை எய்துவதற்கு மட்டுமல்லாது, லௌகீக வாழ்விற்கும் பொருந்தும். சங்கரர் போன்ற மகான்களும்கூட என சபலம் மிகுந்த மனக்குரங்கை பக்தி என்னும் வலிய கயிறால் கட்டி உன் வசப்படுத்திக் கொள் என்று பிரார்த்திக்கிறார். ("மம ஹ்ருதய கபிம் அத்யந்த சபலம் த்ருடம் பக்த்யா பத்வா")

முண்டக உபநிஷத்தும் இதை மிக அழகாக விளக்குகிறது. சிந்தையில் தெளிவு பெற்ற சாதகன் தான் விரும்பும் உலகங்களையும் போகங்களையும் அடைகிறான்.

**யம்யம் லோகம் மனசா சம்விபாதி**
**விசுத்த சத்வ: காமயதே யாம்சவ காமான் (1.10)**

ஆனால் ஆசைகளை வெல்லாத சாதாரணன் அந்த ஆசைகளுடனேயே பிறக்கிறான்.

**காமான் ய: காமயதே மன்ய மான:**
**ஸ காமபிர் ஜாயதே தத்ர தத்ர (2.2)**

*இந்தப் பிரம்மத்தை விரும்புபவன் அதை அடையப் பெறும் முயற்சியைச் செய்ய வேண்டும். அந்த லக்ஷ்யத்தில் ஊன்றிய சங்கல்பம் கொண்டவனாக வேண்டும். முண்டக உபநிஷத், இந்த ஞானம் அறிவாலோ, படிப்பாலோ அடைய முடியாதது என்பதை அடித்துச் சொல்லுகிறது.*

*நேயமாத்மா ப்ரவசனேன லப்ய:*
*நமேதயா ந பகுனா ஸ்ருதேன (2.3)*

*புலனடக்கம், ஞானம், பயமின்மை உறுதி போன்ற உன்னத குணம் படைத்தவர்களே இந்த நிலையை அடைய முடியும் என்கிறது இந்த உபநிஷத்.*

*சம்ப்ராய்மையனம் ருஷயோ ஞான த்ருப்தா:*
*க்ருதாத்மான: வீதராகா: ப்ரஸான்தா:*
*தே சர்வகம் சர்வத: ப்ராப்ய தீரா*
*யுக்தாத்மன: சர்வமேவாவிசந்தி (2.5)*

*சித்தர்கள் கருத்து:*

*இறைவனிடத்தே மனதைச் செலுத்தி பரம்பொருளோடு ஐக்கியமாதல் என்பது மிகவும் கடினமான செயல் என்பது தெளிவு. பாம்பாட்டி சித்தர் என்ற பெருமான் "அகப்பற்று நீக்கல்" என்ற தலைப்பில் பேசுகிறார்.*

*ஆசையென்னுஞ் செருப்பின்மேல் அடிமை வைத்தே*
*ஆங்கார முட்காட்டை அறவே மிதித்தே*
*காசையெனுந் துர்குணத்திற் கனலைக் கொளுத்திக்*
*காலாகாலங் கடந்தோமென் றாடாய் பாம்பே.*

*இந்த 'ஆங்கார முட்காட்டை' எப்படிக் கடப்பது? அதற்கு ஒரு செருப்பு தேவை. அதுதான் ஆசையெனும் செருப்பு. அது நம் காலடியில் இருக்கும்போது நம்முடைய அடிமை. அதுவே நம் தலைமேல் ஏறிவிட்டால் அகங்கார, மமகாரங்களுக்கு வித்தாகிறது. இந்த ஆசை நம் கீழ் இருந்து விட்டால், காசு எம்மாத்திரம்? அதைக் கனலை வைத்துக் கொளுத்தி விட்டால் கீதை கண்ட ஸ்திதப்ரக்ஞ நிலை வந்து விடுகிறது. எவன் இந்திரியங்களைத் தூண்டும் விஷயானுபவங்களில் ஈடுபடாமல் நிலைபெற்று*

பிரம்ம நாட்டத்தில் நிற்கிறானோ, அவன் ஸ்திதபிரக்ஞன் (இந்திரியாணி இந்திரியார்த் தேப்ய: தஸ்ய பிரக்ஞா பிரத்ஷ்டிதா - கீதை)

ஆனால் புலனடக்கம் என்பது மிகக் கடினமானது. முனிவர்களுக்கும் எளிதில் கிடைக்காத நிலை. பட்டினத்தால் "முதல்வன் முறையீடு" என்ற தலைப்பில் இதை நம்முடைய நிலையில் இருந்து பார்க்கிறார்.

ஐந்து புலனும் அடங்கேனே என்குதே;
சிந்தை தவிக்கிறதும் தேறேனே என்குதே (11)

புலன்கள் தம் போக்கில் ஓடிக்கொண்டே இருக்கின்றன. பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என்ற படுகுழிகள் நம்மை வீழ்த்தத் தயாராக இருக்கின்றன. மேலும்

காமக் குரோதம் கடக்கேனே என்குதே
நாமே அரசென்று நாள்தோறும் எண்ணுதே (12)

காமத்தின் சக்தி மகத்தானது. யயாதியின் கதை இதை நன்கு விளக்குகிறது. முதுமையடைந்த மன்னன் ஆசை என்னும் வலையிலிருந்து மீள இயலாமல் தன் கடைசிப் புதல்வனிடம் தன் முதுமையை அளித்து, அவன் இளமையைப் பெற்று விஷய சுகங்களில் மீண்டும் மீண்டும் வீழ்கிறான். 'நாமே அரசென்று' அவன் பலகாலம் சுகபோகங்களை அனுபவித்தும் மனம் திருப்தி அடைவதில்லை. இறுதியில் தன் முதுமையைத் திரும்பவும் பெற்று அறிவு பெறுகிறான்.

பட்டினத்தார் அடுத்த பாடலில் காம, குரோதங்களைப் பற்றி எச்சரிக்கை விடுக்கிறார்.

அச்சம் ஆங்காரம் அடங்கேனே என்குதே
கைச்சும் இன்னுமானங் கழலேனே என்குதே (13)

இந்த உடல் நிலையற்றது என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். பின்னரும்கூட "இது என்றும் நிலைத்து இருக்கும்" என்றே நாம் கருதி ஆசாபாசங்களை உதறித்

*தள்ள மாட்டாமல் சம்சார சாகரத்தில் மீண்டும் மீண்டும் உழலுகிறோம்.*

*நீர்க்குமிழி ஆம்உடலை நித்தியமாய் எண்ணுதே!*
*ஆர்க்கும் உயராசை அழியேனே என்குதே. (14)*

*மகாபாரதம்:*

*இதே கருத்தை மகாபாரதத்தில் 'யக்ஷ பிரஸ்னம்' என்னும் பகுதியில் காண முடிகிறது. நீர் முகர ஒரு நீர்நிலையை நாடிச் சென்ற தன் சகோதரர்கள் திரும்பி வராததைக் கண்டு தருமபுத்திரன் தானே அங்குச் செல்கிறான். தன்னுடைய நான்கு சகோதரர்களும் மயக்கமுற்று தடாகத்தின் கரையில் இருப்பதைக் கண்டு திகைக்கிறான். அப்பொழுது ஒரு யக்ஷன், அவன் முன் தோன்றி "என்னுடைய வினாக்களுக்கு விடையளிக்காத காரணத்தால் இவர்கள் மயங்கிக் கிடக்கிறார்கள்" என்று விளக்குகிறான். பின்பு, தருமனுக்கும் யக்ஷனுக்கும் இடையே நடந்த வினா-விடைப் படலம் 'யக்ஷ பிரஸ்னம்' என்ற பகுதியாகும். இதில் "உலகின் மிகப் பெரிய அதிசயம் என்ன?" என்று யக்ஷன் வினவுகிறான். இதற்கு தருமன் அளித்த பதில் உயர்ந்த வேதாந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. "உலகில் பிறர் மரணமடைவதைக் கண்டும்கூட, நான் நிரந்தரமானவன் என்று மக்கள் நினைக்கின்றனர். இதுவே உலகில் பேராச்சர்யம்" என்கிறன். எனவே உடல் நல்ல நிலையில் இருக்கும்போதே பற்றிலிருந்து விடுபட முயல வேண்டும். நீர்க்குமிழியாம் உடலை நித்தியமாய் எண்ணும் தன்மை விலக வேண்டும். இறுதிக் காலத்தில் உடலும் உள்ளமும் தளர்ந்த நிலையில் இறைச் சிந்தனை வருவது சாத்தியமில்லாமல் போகலாம். இதைச் சங்கர பகவத்பாதர் அழகாக விளக்குகிறார்:*

*ப்ரணம்யா ஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா*
*ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேஸனேக வாரம்*
*நவக்ரும் க்ஷமோஹும் ததானீம் க்ருபாப்தே*
*நகார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷச் (22)*

பொருள்: இறுதிக் காலத்தில் நான் உன்னைப் பிரார்த்தனை செய்யும் திறமை அற்றவனாகி விடுவேன். அதனால் இப்பொழுதே பலமுறை உன்னை வழிபடுகிறேன். கடைசிக் காலத்தில் என்னை ஒதுக்கி விடாதே.

மேற்கண்ட வரிகள் இளமைக் காலத்திலேயே புலனடக்கத்தின் அவசியத்தை விளக்குகின்றன. இதுபற்றிய விளக்கம் மஹாபாரதத்தின் பல இடங்களில் காணக் கிடைக்கிறது. உத்யோக பர்வாவில் அமைந்துள்ள விதுர நீதி ஓர் உயர்ந்த தத்துவ பொக்கிஷம். பகவத் கீதை, சனத் சுஜாதீயம் போன்ற இதர நூல்களைப் போல இதுவும் பாரதத்தின் உயர்ந்த பகுதியாக அமைந்துள்ளது. இது விதுரர் என்ற ஞானி திருதராஷ்டிரனுக்கு உபதேசம் செய்யும் பாணியில் அமைந்துள்ளது. விதுரர் சரீரத்தை ஒரு இரதமாக உருவகப் படுத்தியுள்ளார். ஆத்ம ஞானமே சாரதி. புலன்கள் ரதத்தைச் செலுத்தும் குதிரைகளாகின்றன. திறமையுள்ள சாரதி, புலன்களாகிய குதிரைகளை நன்கு அடக்கிப் பாதையை சுகமாகக் கடக்கின்றான்.

ரத: சரீரம் புருஷஸ்ய ராஜன்
ஆத்மா நியந்தேந்திரியாண்யஸ்ய சாஸ்வா:
தைரப்ரமத்த: குசலீ சதஸ்வை:
தான்னத: சுகம் யாதி ரதீவ த்ர: (விதுர நீதி 59)

கடோபநிஷதத்தில் இந்த வடிவமைப்பு இன்னமும் சற்று விஸ்தாரமாகக் காணக் கிடைக்கிறது. புத்தியைச் சாரதியாகவும் மனதைக் கடிவாளமாகவும் வடிவுபடுத்தி உடநிடத ரிஷியானவர் இதே கருத்தை விளக்குவார் (கடோபநிஷத் 1.3.3-4)

இத்தகைய உன்னத நிலையை அடையப் பெறாதவனின் நிலையை விதுர நீதி நன்கு விளக்குகிறது. அவன் சாரமான விஷயத்தை அற்பமாகவும், அற்பமான விஷயத்தைச் சாரமாகவும் கொள்கிறான். இதைவிட வருந்தத்தக்கதும்

*நிலைமையும் கூறப்படுகிறது. இந்திரியங்களை அடக்காதவன் துன்பத்தையே இன்பமாகப் பார்க்கிறான்.*

***அனர்த்தம் அர்த்தத: பஸ்யன்***
***அர்த்தம் சைவாப்யனர்த்தத:***
***இந்த்ரியைரஹிதைர் பால:***
***சுதுக்கம் மன்யதே சுகம் (61)***

*துக்கத்தை சுகமாகக் கருதும் நிலை உள்ளபடியே மிகப் பெரிய தாழ்வுநிலை. இத்தன்மை மாற முன்பு கண்ட தந்நிலை இழத்தலே சாலச் சிறந்த மார்க்கம்.*

*ஆண்டாளும் அப்பரும் மனம் உருகி தந்நிலை துறந்து இறைவனைக் காணும் பாணியை முதலில் பார்த்தோம். பின்னர் இந்நிலை எய்துவது எத்துணை கடினம் என்பதை முண்டக உபநிஷத், மகாபாரதம், ஆதிசங்கரர், சித்தர் பாடல்கள் மூலம் அறிய முற்பட்டோம். இந்த வகையில் ஒரு முரண்பாடு இருப்பது போலத் தோன்றுகிறது. பிரம்ம நிஷ்டை சாமானியர்களால் அடையக் கூடியதா, இல்லை மிகவும் கடினமான ஒன்றா என்பதே பிரச்சினை. இதற்கு விடை 'மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' என்ற வள்ளுவரின் வரிகளில் தெளிவாகும். உபதேசவுந்தியார் சொல்லும் 'உருமாய்ந்ததேல் எழாது' என்ற கருத்தே இந்நிலை எய்த நல்லதோர் வழிகாட்டி.*

*இந்த நிலைக்கு ஏற்றிச் செல்லும் ஏணிதான் ரமண பகவானின் "நான் யார்?" என்னும் வினா. இதற்கு விடையும் நம் கையில்தான் இருக்கிறது. தீவிர ஈடுபாடுதான் தேவை.*

# நீல வானில் இரு வெண்முகில்கள்

**சு. பரமேஸ்வரன், கோவை**

### *கனிவிக்க வந்த கனி - கனிந்தகனி*

*இன்றைக்குச் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு, சோழவள நாட்டில் உள்ள திருமறைக்காடு எனும் வேதாரண்யத்தில் ஒரு ஞான மேகம் தோன்றி அருள் மழை பொழிந்தது. அடுத்து 20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பாண்டிய நாட்டில், திருச்சுழி எனும் புண்ய பூமியில் ஒரு அருள் மேகம் தோன்றி அது திரு அருணையில் 54 ஆண்டுகள் கருணைமழை பொழிந்தது.*

*"அறிவை அறிவது பொருளை அருளிய பெருமாளே"*
*(அருணகிரி நாதர்)*

*"ஆயத்துள் நின்ற அறுசமயங்களும்*
*காயத்துள் நின்ற கடவுளைக் காண்கில"... (திருமந்திரம்)*
*இன்றெனக்கருளி இருள் கடிந்துஉள்ளத்து*
*எழுகின்ற ஞாயிறே போன்று;*
*நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்"...*
*(திருவாசகம்)*

*இந்த நிறைமொழிகளிலிருந்து நாம் அறியும் முதற் பொருள் யாது? இது கற்பனைப் பொருளா? காட்சிப் பொருளாயின் கண்டவர்யார்? கண்டவர் விண்டுதற்கு இயலுமோ? எனும் சர்ச்சைகள் ஆதிமுதல் இன்றுவரை தொடர்ந்து இயங்கி வருகின்றது. நமது உள்ளத்தில் உள்ள அடிமனதில் இருள் எனும் அறியாமை மண்டிக் கிடக்கிறது.*

ஆசை மற்றும் அச்சத்தின் காரணமாக கற்ற அறிவின் துணைகொண்டு நாம் புறமனத்திலேயே தேடிக் கொண்டிருக்கிறோம். இது பயனற்ற முயற்சியாகும். ஆனால் நமது ஆன்ம ஞான சம்பத்தை மெய்யாகவே தேடித் திரிவோருக்கு அருள்புரிய வாழையடி வாழையாக வந்துகொண்டு இருக்கும் சற்குருமார்களில் பகவான் ஸ்ரீ ரமணரும், தாயுமான அடிகளும் தலைசிறந்த மகான்களாவார்கள். இவர்களது அனுபூதி வாழ்க்கையிலும், வாக்கிலும் சிறப்பான ஒற்றுமை உண்டு.

இவர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றக்கூடிய பெரும் ஞானியர். கனிந்தகனி நம்மைக் கனிவிக்க வந்த கனி. தாயுமானவரும், ஸ்ரீ ரமணரும் சாகாவரம் பெற்று இன்றும் வாழ்கிறார்கள்.

மதியால் வித்தகனாகி மனத்தால் உத்தமனாகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே

உலகில் உள்ள மதங்கள் யாவும் மதியால் வரையறுக்கப் பட்டவையாகும். இவர்களது வழி ஒரு மதத்தைச் சார்ந்ததல்ல. அத்துவிதம் என்றோ, சைவ சித்தாந்தம் என்றோ கூறுவது எல்லாம் தவறேயாகும். பிற சமயங்களையோ, சடங்குகளையா இவர்கள் பழித்து ஒருபோதும் பேசவில்லை. தாயுமானவரும், ரமணரும் மதிகடந்து அப்பால் ஒளிரும் ஆன்மச் சுடரையே மனிதகுல குறிக்கோளாகக் காட்டுவர். இவர்களை எந்தவித சமயக் கூட்டிலும் அடைத்து விட முடியாது. நீலவானத்தில் சுதந்திரமாக சிறகடித்துப் பறக்கும் வானம்பாடிகள், வெண்முகில்கள்.

தாயுமானவர் தமிழ், வடமொழியில் உள்ள தத்துவ நூல்கள் அனைத்தும் படித்துத் தேறியவர். அவரது கல்வி ஏட்டளவில் நிற்கவில்லை. மெய் உணர்வு நாட்டம் மிகுந்தது. தாம் கற்ற நூல் அறிவை மதிக்கவில்லை.

"சின்னஞ்சிறியார்கள் செய்த மணற்சோற்றை ஒக்கும்
மன்னுங்கலை ஞானமார்க்கம் பராபரமே"

என்றார்.

"நன்று உடையானை, தீயதில்லானை" - என்ற பாடல் பெற்ற திருச்சிராப்பள்ளி மலைமேலே உள்ள சிவன் சந்நிதியில் ஒருநாள் தமது ஞானகுருவாம் "மௌனசுவாமி" களைச் சந்தித்தார். பின்பு நடந்ததை அவரது மொழியிலேயே கேட்போம்.

ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினால்
ஆகின்ற ஆக்கைநீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநான்
அறியாத காலமெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போந்தநெறி என்றிருந்தேன்
பூராய மாகநின தருள்வந் துணர்த்தஇவை
போனவழி தெரியவில்லை

குருநாதனின் திருவடியில் தாம் கற்ற அறிவை எல்லாம் வைத்துவிட்டு, மெய் உணர்வு பெற்று ராமநாதபுரம் சென்று பல ஆண்டுகள் தவவாழ்க்கையை மேற்கொண்டார். ஞானநெறியில் நின்று அவர் பாடிய பனுவர்கள் யாவும் ஆழமான பொருள் செறிவும், அழகும், அருளும் நிறைந்தவை. அவற்றைத் தமிழ் உபநிடதம் எனலாம். இதில் கற்பனைக்கோ, பொய்மைக்கோ இடமில்லை. என்றும் மாறாமல் வாழ்வுக்குத் தேவையான நல்ல பண்புகளையும், செயல்களையும் மட்டுமே உணர்த்தியுள்ளார்.

"இறைவன் யார்?" பொய் வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சி என்றார். அவன் எங்கே உள்ளான்? அங்கு, இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் அருளோடு நிறைந்தது என்பார். அவரது பாடல்கள் யாவும் ஆழ்ந்த பக்தியை ஊட்டி உள்ளத்தை உருகச் செய்யும் பனுவல்களாகும். இவரது சமயம் கடந்த பாடல்கள் மேலைநாட்டாரையும், ஞானிகளையும் கவர்ந்தது வியப்பல்ல. வேதாந்தம், சித்தாந்தம் இவைகளுக்கு ஒரு இணைப்புப் பாலமாக இருந்தவர். உலகிற்குச் சமரச

*சன்மார்க்கத்தை முதன்முதலாக அளித்தவர் தாயுமான சுவாமிகள். தத்துவம், தர்க்கவாதம், மதம் என்பது ஒருவகை நோய்தான். இவைகளிலிருந்து விடுபடுவதே நோயற்ற ஞான வாழ்வு. அதுவே ஆன்மிகம். அதுகுறித்து ஆழங்காற்படுவதே தாயுமானாரின் பாடல்களாகும்.*

*தேடாது உற்ற நல்திருவருள் நிதி*

*ரமணர் ஆத்மானுபூதி அடைவதற்கு முன்பு அவர் படித்த ஒரே புத்தகம் "பெரிய புராணம்" மட்டுமே. எந்தவித சமய அனுஷ்டானமோ, சாதனையோ செய்ததில்லை. 'பிரம்மம்' என்ற சொல்லைக்கூட அறியாத வயதில் பிரம்மநிலையை அடைந்தவர். மார்க்கண்டேயர் சிவனைச் சரண்புகுந்து மரணவாதனை அற்றார். நசிகேதன் யமதர்மனைச் சரண்புகுந்து மரணத்தை வென்றார். பரிக்ஷித்து மகாராஜா சுகப்பிரம்ம ரிஷியைச் சரணடைந்து முக்தி பெற்றார் என்பது வரலாறு. ஆனால் ரமண பகவானுக்கு அதே மார்க்கண்டேயர் வயதில் தேடாது உற்ற நல் திருவருள் நிதி எளிதில் கிடைத்தது. 16 வயதில் அவருக்கு ஒருநாள் திடீரென மரணபயம் ஏற்பட்டது. நிலைமையைத் தானே எதிர்கொண்டார். இதனை அவரது திருவாக்காலே கேட்போம்!*

*ஒருநாள் மதியவேளையில், இலக்கண பாடம் எழுதிக்கொண்டு இருந்தேன். திடீரென மரணபயம் ஏற்பட்டது. இது என்னைத் தீவிர யோசனையில் ஆழ்த்தியது. சரி சாவு வந்துவிட்டது. எனக்குள் நானே ஒத்திகை பார்க்கத் தொடங்கினேன். சாவு என்றால் என்ன? எது சாகிறது? என்று பார்த்தேன். கை, கால்கள் விறைத்து, உணர்வற்றுப் போகிறது. நான் செத்து விட்டேனா? இந்த உடல் தான் நானா? ஆனால் இந்த உடலுக்கு அப்பால் ஏதோ ஒன்று சொரூப சக்தியாக, பேருணர்வாக இருக்கின்றதே, ஆம், உடலுக்குள் கட்டுப்படாத ஒரு வஸ்துவே நான் என உரைப்பட்டேன். இது கனவு அல்ல. நிதர்சனமான உண்மை என்பது என் அனுபவமாகப் பளிச்சிட்டது. இந்நிலை அடைந்த பின்பு,*

பள்ளிக்குச் சென்றபோதும், வீட்டிலும் அடிக்கடி இந்தப் பேருணர்வு என்னை ஆட்கொண்டது.

நான் எனும் அகங்காரத்தின் இழப்பே சாவு. இதுவே பிறவாச் சாவு, இதுவே இறவாப் பிறப்பு, இதுவே மரணமிலாப் பெருவாழ்வு என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தார்.

"இறக்கக் கற்றவரே இருக்கக் கற்றவர்". இந்நிலையை அடைவது எவ்வளவு அரிய, பெரிய செயல் என்பதைத் தாயுமானவர் கூறக் கேட்போம்.

"சினமிறக்கக் கற்றாலும், சித்தி எல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே."

பொருள்களில் மிக மதிப்புடையது டைமண்ட் எனும் வைரம். ஆன்மிகத்தில் உயர்ந்த நிலை Die Mind - மனம் இறக்கக் கற்றல்.

மரண அனுபவம் ஏற்பட்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு ரமணர், வீட்டைத் துறந்து திருவண்ணாமலையை நாடிச் சென்றார். பள்ளிப் படிப்பிலோ, உலக வாழ்க்கையிலோ அவரது மனம் பற்றவில்லை.

உரைகல் - மின்னுவதெல்லாம் பொன்னல்ல

"ஞானத் தபோதனவரை வாவென்றழைக்கும்" திருவண்ணாமலையை ரமணர் தமது 17ஆவது வயதில் சென்றடைந்தார். அருணாசல ஆலயத்திலும், மலைமேல் உள்ள குகைகளிலும் ஒற்றைக் கோவணத்துடன் சுற்றித் திரிந்தார். உலகை மறந்து உடல் சுமையுற்று, ஆன்மஜோதியாய், நிர்விகல்ப சமாதி நிலையில் பல ஆண்டுகள் இருந்தார். அதன்பின்பு சகஜசமாதி நிலையில் 54 ஆண்டுகள் திருவருணையிலேயே வாழ்ந்து வந்தார்.

தொடரும்

# அருணாசல பக்த பகவத்

*நூற்றாண்டு விழா (1912-2012)*

**ஆகுரா**


*நூறாண்டுகளுக்கு முன்பு 8-11-1912 அன்று பகவத் பிரசாத் சிங் பீகார் மாநிலத்தில் தனித்து உள்ளடங்கிய ஒரு குக்கிராமத்தில் பிறந்தவர்.*

*கற்கும் கல்வியில் பேரார்வமும், இந்தியாவின் தளைகள் ஆங்கிலேயரிடமிருந்து விடுபட இந்திய சுதந்திரப் போராட்டத்தின்மீது நாட்டமும், தனது ஒப்பில்லா குருவாகிய பகவான் ரமணரின்பால் கொண்ட அளவற்ற பக்தியாலும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு உன்னதமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் பக்த பகவத் ஆவார்.*

*தனது இறுதி நாளான 10 ஏப்ரல் 2000 அன்று அவர் அமெரிக்காவில் உருவாக்கிய குரு ரமணரின் நியூயார்க் ஆலயத்தில் தனது உயிர் நீங்கிய ஊன் உடம்பை நீத்தார்.*

*பக்த பகவத் அவர்கள் அருணாசல ஆச்ரமம் என்ற அமைப்பை மேற்கத்திய நாடுகளில் நிறுவி தனது வாழ்வின்மூலம் அநேக அன்பர்களையும் பகவான் பணியில் ஊக்குவிக்கும் ஒரு கருவியாக அமைந்தார்.*

*சீதா பிராட்டியார் பிறந்த புனித மண்ணான மிதிலையில் அமைந்த ஒரு குக்கிராமத்தில் பிறந்த இவர் தனது இளமையில் அறிவு முதிர்ச்சியைக் காண்பித்தமையால் 'ஒரு குழந்தை உடம்பில் ஒரு முதியவர்' என்று அழைக்கப்பட்டார். இவரது கிராமத்தை அணுக சரியான*



பாதைகூட இருந்ததில்லை; வழிபட ஒரு கோயிலும் இருந்ததில்லை. தனது இளமைக் காலத்திலேயே இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர். அதன்பின்னர் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து பாட்னா பல்கலைக்கழகத்தில் பட்டமும் பெற்றார். 1941 ஆம் ஆண்டு அவர் பால்பிரண்டன் எழுதிய A Search in Secret India என்ற நூலின் இந்தி மொழியாக்கத்தை படிக்க நேர்ந்தது முதல் பகவான் ரமணரின்பால் ஈர்க்கப்பட்டார்.

அருணாசலம் அடைய வேண்டிய தனது தாகத்தை தணிக்க முடியாமல் சோதிடக் கலையில் ஆர்வம் கொண்ட இவர் சோதிட சாஸ்திரத்தில் தனது கல்வியை தொடர வேண்டி இருந்தது. இடையில் தனது வாழ்க்கையின் வறுமையிலும் சுதந்திர நாடாகிய அமெரிக்காவின்பால் இவருக்கு ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. இவரது கனவை நிறைவேற்ற ஒரு நண்பரின் உதவி கிடைக்கப் பெற்று 1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத்திற்குப் பின் அமெரிக்காவில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். அதன்பின் அமெரிக்காவில் இந்தியத் தூதரகத்தில் தனது பணியைத் தொடர்ந்தார். அவருக்குப் பல நேரங்களில் பகவான் ரமணர் கனவில் வந்து காட்சி கொடுத்த வண்ணமாக இருந்தார். அவர் பகவான்பால் கொண்ட அதீத பக்தியால் பகவானைப் பற்றிய கனவுகள் பல்வேறு ரூபங்களில்

தொடர்ந்த வண்ணமாக இருந்தன. பகவான் ரமணர் நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக 1950 இல் விதேக முக்தியடைந்த பின்பும் அவரது இருப்பை தான் கண்டவண்ணம் ரமணாச்ரமத்திற்குக் கடிதங்களாக எழுதி வந்தார்.

1959 ஆம் ஆண்டு தொழில் ரீதியாக தனது அமெரிக்க வாழ்வைத் தொடர முடியாத நிலையில் தனது குடும்பத்துடன் இந்தியாவிற்கு வந்தார். மீண்டும் வறுமையான ஒரு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும் 1960-ல் தனது நீண்டகால கனவாக அமைந்த அருணாசல விஜயத்தை மேற்கொள்ள, இவர் இந்தியா திரும்பியது பயன்பட்டது. பகவானின் தீவிர பக்தரான ஆர்தர் ஆஸ்போர்ன் அவர்களை ஸ்ரீரமணாச்ரமத்தில் சந்தித்தார். அச்சந்திப்பின்போது ஆஸ்போர்ன் அவர்கள் பக்த பகவத்தை மீண்டும் அமெரிக்க செல்லும்போது அங்கு ரமண சத்சங்கங்களை நிறுவ ஊக்கப்படுத்தினார். அன்றைய நிலையில் பக்த பகவத் மீண்டும் அமெரிக்கா செல்வதென்பது ஓர் கனவாகவே இருந்தது. ஆனால் பிற்காலத்தில் 1962 ஆம் ஆண்டு மீண்டும் அமெரிக்க ஐக்கிய சபையில் இந்தியப் பணியில் தனது வாழ்க்கையைத் துவக்க நேரிட்டது. இது பகவான் அருளாலேயே நிகழ்த்தப்பட்ட ஓர் மாற்றமாக பகவத் அவர்கள் கருதினார். மீண்டும் அமைந்த இந்த அமெரிக்க வாழ்க்கை பகவான் ரமணர் தமக்கு அளிக்க இருந்த ஏதோ ஒரு பணியின் நிமித்தமாகவே என்று கருதலானார். அதன்படியே பிற்காலத்தில் 1965 களில் நியூயார்க் நகரத்தில் பல ரமண சத்சங்கங்களை நடத்தலுற்றார். பின்பு அந்தச் சத்சங்கங்கள் வாரத்திற்கு ஒருமுறையாக இருந்து நாள்தோறுமாக நடைபெறலாயிற்று.

1966 ஆம் ஆண்டு ‘அருணாசல ஆச்ரமம்’ எனும் பதிவு பெற்ற அமைப்பை அமெரிக்காவில் உருவாக்கினார். நியூயார்க் நகரத்தில் பதினெட்டு ஆண்டுகள் வாடகை கட்டிடத்தில் இயங்கிய வந்த அருணாசல ஆச்ரமமும் தனது சொந்தக் கட்டிடத்தில் இயங்கலாயிற்று.

*1972 ஆம் ஆண்டு கனடா நாட்டிலும், நோவாஸ்கோசியா எனும் நகரில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் அருணாசல ஆச்ரமம் தனது சொந்த இடத்தில் தழைக்கத் துவங்கியது.*

*பால்பிரண்டனின் ரமணரைப் பற்றிய புத்தகம் ரமணரைப் பற்றி அறிய மேற்கத்திய உலக அடியார்கள் அநேகருக்குத் தூண்டுகோலாக அமைந்தது. அருணாசல பக்த பகவத் அவர்களின் அருந்தொண்டு மேற்கத்திய உலகம் முழுவதும் பல்வேறு ரமண மையங்கள் உருவாகவும் அதன் வழியாக இன்றும் பல்வேறு நாட்டினரும் தங்கள் மதங்களைக் கடந்து ரமணரை தன் வாழ்நாளின் ஒளி விளக்காக ஏற்க உறுதுணையாகி வருகிறது.*

*மணிவாசகர் இறைவனுக்கு திருப்பெருந்துறையில் ஆலயம் அமைத்த அரும்பணியை*

*குருமூர்த்தமாகக் குலவிய தன் கோயில்*
*பரமார்த்தம் என்று அப்பணியில் செலவிடவே*

*(ரமண புராணம்)*

*என்று நினைவுகூறும் வகையில் அதற்கு இணையாக அருணாசல பக்த பகவத் அவர்கள் அமெரிக்கா மற்றும் கனடாவில் நிறுவிய ரமணத் திருக்கோயில் பணிகள் அமைந்தன எனில் மிகையாகாது.*

*இந்தியா மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தங்களது வறுமையான வாழ்வையும் பொருட்படுத்தாது ரமணரின் தொண்டே இலட்சியமாகக் கொண்டு பல்வேறு சத்சங்கங்கள் மற்றும் ரமண திருக்கோயில்களை நடத்திவரும் ரமண அன்பர்களுக்கு இவரது வாழ்க்கை ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.*

*அருணாசல பக்த பகவத் அவர்களின் நூற்றாண்டு விழா பல்வேறு அமெரிக்க நகரங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இன்றும் அவர் ரமண அடியார்களின் இதயத்தில் வாழ்ந்து வழிகாட்டி வருகிறார்.*



# செய்திகள்

ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை

*ஸ்ரீபகவானது 133வது ஜயந்தி விழா கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் 29-12-2012 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு அபிஷேகம், வேதபாராயணம் ஆகியவற்றுடன் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று ஸ்ரீபகவானின் ஆசி பெற்றனர். இவ்விழாவின்போது பகவானின் சந்நிதி வண்ண மலர்கள் கொண்டு சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட காட்சியை இவ்விதழின் முன்னட்டையில் காணலாம். சிறப்பு இசை நிகழ்ச்சிகள் இரண்டு தினங்களும் நடந்தேறின. திருச்சுழி மற்றும் மதுரையிலும் ஜயந்தி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.*

## *29-12-2012 சனிக்கிழமை 133 வது ஜயந்தி விழா நிகழ்வுகள்*

ரமண கேந்திரம், மயிலாப்பூர், சென்னை

*காலை 7 மணிக்கு மஹன்யாஸம், ஏகாதச ருத்ர ஜபம் மற்றும் ரமண சஹஸ்ரநாம அர்ச்சனையுடன் விழா*

*துவக்கப்பட்டது. மதியம் அக்ஷரமணமாலை பாராயணத்திற்குப் பின்பு அனைவருக்கும் அன்னப் பிரசாதம் அளிக்கப்பட்டது. மாலையில் பேராசிரியர் அனந்தராமன் அவர்களின் நாமசங்கீர்த்தனம், திருப்புகழ் அன்பர்களின் பஜன் மற்றும் மயிலை கபாலீஸ்வரர் கோயில் மாடவீதிகளில் பகவானின் திருவுருவ வீதிவுலா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. இதே மையத்தில் 30-12-2012 அன்று மாலை சுவாமி அபவர்கானந்தா, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் சென்னை, அவர்கள் தலைமை உரையாற்றவும் அவரைத் தொடர்ந்து டாக்டர் ராம்மோஹன், ரமணோதயம் ஆசிரியர், இசைக்கவி ரமணன் மற்றும் ஓய்வு பெற்ற மதுரைக் கல்லூரி முதல்வர் டாக்டர் நிரஞ்சன் ஆகியோர்கள் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள். இவ்விழாவை முன்னிட்டு 19-12-2012 முதல் 28-12-2012 வரை நாள்தோறும் திரு. சுப்ரமணியம் சாஸ்திரிகள் தலைமையில் லக்ஷார்ச்சனை வைபவம் அன்னதானங்களுடன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.*

ரமணாலயம், குரோம்பேட்டை

*21-12-2012 மாலை முதல் 23-12-2012 இரவு வரை மூன்று நாட்களாக ரமண சந்நிதிமுறை மற்றும் ரமண சரணப் பல்லாண்டு முற்றோதல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஐம்பதுக்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் இவ்விழாநாட்கள் முழுவதும் முனைப்பாக அமர்ந்திருந்து பாராயணம் செய்தது பாராட்டத்தக்கது. இவ்விழாவிற்கு திரு. வே.சு.ரமணன், தலைவர், ஸ்ரீரமணாச்ரமம் திருவண்ணாமலை அவர்கள் முழு ஆதரவுடன் நடந்தேறியது. திரு. ஸ்ரீராம், திரு. சந்திரமௌலி மற்றும் சூளைமேடு வி. ரமணன் ஆகியோர் முன்னின்று இப்பாராயணத்தை நடத்தி வைத்தனர். 28-12-2012 மாலை சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.*

*29-12-2012 சனிக்கிழமை ரமண ஜயந்தியன்று காலை மங்கள இசை, வேதபாராயணம் மற்றும் மயிலை கபாலீஸ்வரர் கோயில் திரு. சத்குருநாத ஓதுவார் அவர்கள் ரமண சந்நிதிமுறை இசையுடன் விழா நடைபெற்றது. அக்ஷரமணமாலை கூட்டுப்*

*பாராயணத்திற்குப் பின்னர் இவ்விழாவில் திரளாகக் கலந்து கொண்ட 300 க்கும் மேற்பட்ட ரமண அன்பர்களுக்கு அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பக்தர்கள் கலந்து கொண்டது மிகவும் நெகிழ்ச்சியாக அமைந்தது.*

ரமண சச்சிதானந்த சபை, சூளைமேடு

*29-12-2012 அன்று சிறப்பு வேதபாராயணம் மற்றும் ரமணர் அருளிய உபதேச நூல்களின் பாராயணம் நடைபெற்றன. சிறப்பு பூஜைக்குப் பின்னர் திரளாகக் கலந்து கொண்ட அன்பர்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது.*

ஸ்ரீமுருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*29-12-2012 அன்று மாலை 6 மணிக்கு அருணாசல அக்ஷரமணமாலை பாராயணத்துடன் ரமண ஜயந்தி விழா துவங்கியது. திருமதி திருவேணி அம்மாள் அவர்கள் சிறப்புரையாற்ற விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரளாக கலந்து கொண்ட அனைவருக்கும் பகவான் பிரசாதம் அளிக்கப்பட்டது.*

பூண்டி, தஞ்சை மாவட்டம்

*30-12-2012 அன்று காலை அக்ஷரமணமாலை சிறப்புப் பாராயணத்துடன் இங்கு அமைந்துள்ள ரமண திருக்கோயிலில் ரமண ஜயந்தி விழா சிறப்பாகத் துவங்கியது. தீபாராதனைக்குப் பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

ரமண கேந்திரம், பழனி

*31-12-2012 அன்று பழனி சாய்சதனில் ரமண ஜயந்தி விழா மாலை 6 மணிக்கு சிறப்பு பாராயணத்துடன் துவங்கியது. திரு. காளிமுத்து, திரு. சாய் நடராஜன் மற்றும் திரு. சுப்ரமணியம் அவர்கள் முன்னிலை வகிக்க திரு. சோமசுந்தரம் அவர்கள் தலைமையுரையாற்றினார். சிவத்திரு. சீனி நந்தகுமார், கடலூர் அவர்கள் சிறப்புரையாற்ற விழா இனிதே நடந்தேறியது.*

ரமண கேந்திரம், சேலம்

*1-1-2013 அன்று ரமண ஜயந்தி விழா இங்குள்ள ரமண திருக்கோயிலில் டாக்டர். ராம்மோஹன், திரு. சந்திரமௌலி அவர்கள், திருவண்ணாமலை மற்றும் திரு. சிதம்பர குற்றாலம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்ற திரு. குப்புசாமி அவர்கள் தலைமையில் விழா சிறப்பாக நடைபெற்றது. சிறப்புப் பாராயணத்திற்குப் பின்பு அனைவருக்கும் அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம்,
கோட்டூர் மலையாண்டிபட்டினம், பொள்ளாச்சி

*23-12-2012 மற்றும் 24-12-2012 ஆகிய இரு தினங்களில் இங்கு அமைந்துள்ள ஸ்ரீராமர் கோயிலில் ரமண ஜயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவை ஆனைமலை ஆர்ஷ வித்யாபீடம் சுவாமி ததேவானந்த சரஸ்வதி அவர்கள் துவக்கி வைத்தார். திருமதி திருவேணி அம்மாள் அவர்கள் விழாவை நடத்தி வைத்தார்கள். இவ்விழாவில் ரமண பாதமாலை, ரமண பஜனை மற்றும் ஓவியம், வினாடிவினா, புத்தகம் தயாரித்தல் போன்ற போட்டிகள் பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.*

ரமண பக்த சமாஜம்,
மேற்கு மாம்பலம்

*6-1-2013 அன்று 133 வது ரமண ஜயந்தி விழா* B.V.S.C *மூர்த்தி பள்ளியில் மாலை 6 மணிக்கு வேதபாராயணம், அக்ஷரமணமாலை பாராயணம், அஷ்டோத்ர பூஜை நடைபெற்றன. திரு.* A.R. *சந்திரசேகர் மற்றும் தலைவர்* K. *ஸ்ரீராம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். தீபாராதனைக்குப் பின்னர் திரளாகத் திரண்டிருந்த அன்பர்கள் அனைவருக்கும் அன்னதானம் அளிக்கப்பட்டது.*

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி ஞானத் திருச்சபை
கொளத்தூர், சென்னை

*6-1-2013 அன்று சென்னை திரு.வி.க நகரில் அமைந்துள்ள அருள்மிகு கோமதி அம்மன் ஆலயத்தில் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை 133 வது ரமண ஜயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறப்புச் சொற்பொழிவாக யோகி அமிர்தம் நாகராஜ் அவர்கள் ஆற்றிய உரை அங்கு கூடிய எளிமையான மெய்யடியார்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்தது. அக்ஷரமணமாலை பாராயணத்திற்குப் பின்னர், தீபாராதனை மற்றும் அன்னம் பாலித்தல் நடைபெற்றன.*

## இனிவரும்
## ஜயந்தி விழா நிகழ்வுகள்

ஸ்ரீ ரமண சத்சங்கம், நங்கைநல்லூர், சென்னை

*12-1-2013 சனிக்கிழமை மாலை 4.30-6.00 நடைபெறவுள்ளது. இடம்: ஸ்ரீவரசித்தி விநாயகர் பிரவசன மண்டபம், இந்து காலனி. சிறப்புச் சொற்பொழிவு: டாக்டர் இரா. செல்வ கணபதி அவர்கள்.*

ரமண பக்த சமாஜம், மேற்குமாம்பலம், சென்னை

*26-1-2013 சனிக்கிழமையன்று மாலை மேற்கு மாம்பலத்தில் ஸ்ரீரமணரின் திருவுருவப் படத்துடன் வீதிவுலா நடைபெறும்.*



*ராமாமணி என்று அழைக்கப்பட்ட திரு. ராமசுப்ரமணியன் (திரு. என்.என். ராஜன் அவர்களின் புதர்வர்) 'மவுண்டன்பாத்' இதழின் முன்னாள் ஆசிரியர், கடந்த 5-12-2012 சனிக்கிழமையன்று தனது 81 ஆம் வயதில் பெங்களூரில் ரமண பதமடைந்தார். விரிவான கட்டுரை அடுத்த இதழில் வெளியாகும்.*

## ரமணோதயம் காப்பு நிதி
## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு | | ரமேஷ், ஆஸ்திரேலியா | 5000 |
| டாக்டர் | M.S | வித்யாசங்கரன், மைலாப்பூர் சென்னை-4 | 1000 |
| டாக்டர் | | சுதாசேஷய்யன், சென்னை | 2001 |
| திரு | R.S | ராகவன், சென்னை - 61 | 1000 |
| திரு | M. | நடராஜன் | 500 |
| திரு | T.K. | ஜெயராமன், மதுரை | 500 |
| திரு | | ஸ்ரீதர், பெங்களூரு | 1000 |
| திரு | | சண்முகம், போரூர் | 2500 |
| திருமதி | | ருக்மணி நடராஜன் | 2001 |
| திரு | R | சுந்தரராஜன், சென்னை - 85 | 1000 |

## ரமணோதயம்
Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

வஸந்தா ராகவன் 9445432335

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***கூடுவாஞ்சேரி*** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***பெசன்ட் நகர், அடையார்*** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***அண்ணாநகர்*** U.V. பானு | .......... | 26287809 |
| ***புதுச்சேரி*** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***பொள்ளாச்சி*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

ரமண சந்நிதி முறை முற்றோதல், ரமணாலயம்,
குரோம்பேட்டை






ரமண ஜயந்தி விழா, ரமணாலயம்,
குரோம்பேட்டை






Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542



<u>Above:</u> A schoolhouse built in 1879, in Nova Scotia, Canada was transformed into Sri Arunachala Ramana Mandiram in 1975. Photographed 1967.

<u>Below:</u> The current photograph.

